www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

அன்பளிப்பு U.K 40P France: 6FF, Swiss: 2SF, German: 2.00DM

The EelaBhoomi

# ஈழபூமி

The Fortnightly Tamil Newspaper in London

ஆண்டு 1 வாரம் 15 21-08-1992

RANJIT & COMPANY
SOLICITORS

1st Floor,
176, Mitcham Road
Tooting
London SW17 9NJ.

Conveyancing
Residential & Commercial
Fixed Fee

Free hold
Leasehold
Competitive Quotes By Phone
7 Days A Week

IMMIGRATION
ACCIDENT CLAIM
LICENSING
HOUSING PROBLEM
LANDLORD & TENANT DISPUTE

MORTGAGE ARREARS
HARASSMENTS
TENANCY AGREEMENT
NOTICE TO QUIT
MATRIMONIAL & INJUNCTION WORK

REPRESENTATION AT POLICE STATION IS COVERED BY LEGAL AID
ALL CRIMINAL COURT WORK UNDER TAKEN
☎081 767 9717

## திடுக்கிட வைக்கும் தகவல்கள்!

# கண்ணிவெடியா? கள்ளச்சதியா?

**கொப்பேகடுவ உட்பட பல இராணுவ அதிகாரிகளின் மரணத்தில் பின்னால் புதைந்திருந்த உண்மைகள் பிரேமாவின் செல்லப்பிள்ளையான ஈ. பி. டி. பி இயக்க உறுப்பினர் ஒருவர் உளறியதை அடுத்து வெளியாகி உள்ளன**

(கொழும்பு நிருபர் சேகரன்)

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் உள்ள ஊர்காவல் துறை என்னும் இடத்தில் நடந்த வடகிழக்கு மாகாண தளபதி கொப்பேக்கடுவ உட்பட 9பேரின் மரணத்திற்கு புலிகள் அல்ல காரணம் என்று எமது நிருபர் 20-8-92 அன்று எமக்கு அறிவித்துள்ளார். இது பற்றி திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டிருக்கும் எமது நிருபர் எமக்கு மேலும் பல விடயங்களை தொலைபேசியில் அறிவித்துள்ளார்.

மேற்படி இராணுவ அதிகாரிகள் மரணத்திற்கு புலிகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியே காரணம் என்று அரசு அறிவித்திருந்தபோதும் இந்தக் கொலைகளுக்கு முக்கிய காரணி பிரேமதாஸ என்பது இப்போது தெரியவந்துள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் குழுவான ஈ.பி.டி.பி என்ற குழுவின் உதவியுடன் இந்தக் கொலை நாடகத்தை பிறேமதாஸ நிறைவேற்றி உள்ளார் என்று அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஞ்சன் விஜயரட்ணவினை கொலை செய்ய இதே குழுவைப் பயன்படுத்தியதாக கருத்து வெளியிடும் அத்தகவல்கள் கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திலிருந்து கிடைத்த நம்பிகையான தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கொப்பேக்கடுவ அடுத்த வருடம் இராணுவத் தளபதியாக வரிஇருந்தமையினாலும் இராணுவத்துக்குள் ஏற்பட்டிருக்கும் மாற்றம் பிரேமதாஸ வின் அரசைக் கவிழ்க்கக் கூடிய அளவிற்கு போயுள்ளது என்பதனாலும் இந்தக் கொலைகள தடட மாடடுச மசய்யப் படுள்ளன.

உயர் பதவிகளுக்கு பிரேமதாஸவின் ஆட்களை அ ம ர் த் து வ த ற் கு இவர்களைக் கொல்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை என்று கூறும் அத்தகவல்கள் மேற்படி கொலை தொடர்பான செய்திகள் வெளி நாடுகளுக்குப் போகாதிருக்க இலங்கைக்கு உள்ளும் வெளியேயும் போகும் பெரிய பு ள்ளிகளின் அனைத்து தொலைபேசி இணைப்புக்களும் ஒட்டுகேட்கப்படுவதாகவு ம் ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து

தொடர்ச்சி 7ம் பக்கம்

## நாடுதிரும்பிய அகதிகள் அறுவரைக் காணவில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள தாண்டிக்குளம் எனப்படும் இடத்தில் உள்ள விவசாயப் பயிற்சக் கல்லூரியில் அமைந்துள்ள அகதி முகாமில் இருந்து கடந்த 14 ஆம் திகதி அன்று சங்கானையை சேர்ந்த வைரமுத்து லிங்கன் வயது 24 , கிளிநொச்சியை சேர்ந்த சின்னத்தம்பி தேவர், இராமகிருஸ்ண தேவர், 26, செல்லத்துரை சிவஞானசுந்தரம் ,28, வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சுப்பையா செல்வராசா ,31 ஆகியோர் திடீரெனக் காணாமல் போயுள்ளனர் என்று அப்பகுதி செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இந்திய அரசினால் திருகோணமலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு பின்னர் வவுனியா அகதி முகாமில் அமர்த்தப்பட்டவர்கள் என்று தெரிய வருகின்றது.

## மட்டுநகரில் அதிகரிக்கும் இராணுவக் கெடுபிடிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேசத்திற்கு தளபதியாக புதிதாக நியமிக்கப்பட்ட அல்கம பதவி ஏற்ற பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதனைச் சாவடிகள் அதிகரித்துள்ளன என்று அங்கிருந்து கொழும்புக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்விதமிருக்க இவரின் கட்டளையின் பேரில் ஆங்காங்கே பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன என்றும் அறிய முடிகிறது.

## மீண்டும் யாழ்நகரில் ஊரடங்கு

## போர் விமானங்கள் குண்டு வீச்சு

(கொழும்பு)

கொப்பேக்கடுவ மரணத்தின் பின் செல் தாக்குதல்களை மட்டும் நடத்தி வந்த ஆக்கிரமிப்புப் படைகள் 20-8-92 வியாழக்கிழமை முதல் மீண்டும் யாழ் மாவட்டத்தின் மீதான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது என்று எமது கொழும்பு நிருபர் அறிவித்துள்ளார்.

பூமி அதிர்ச்சி என்று பெயரிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல் வியாழக்கிழமை காலை முதல் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

மலிவு விலையில் ஆட்டு இறச்சி, கோழி இறச்சி

உலகின் அனைத்து பாகங்களிலுமிருந்து தமிழில் வெளிவரும் சஞ்சிகைகள், இலங்கையில் வெளியாகும் தமிழ், ஆங்கில வாராந்தப் பத்திரிகைகள்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான உணவுப்பொருட்களையும்
மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

SPICEWAY

21-23 Kingston Road, South Wimbledon London SW19 1JX
(Near to South Wimbledon Underground Station)

We Sell
Halal Meat, Chicken, Tropical Food, Vegitables & All Kind of Fish Imported from Srilanka With SriLankan & Indian Newspapers, Magazines,
Audio, Video, Compact Disc ... More & More Items

For Futher Details Ring us On 081 540 5526

# மார்க்சிசமும் தேசியமும்

பாண்ஸ் இன் மற்றைய சிந்தனைகள் சில கற்பனைத் தன்மையைக் கொண்டிருப்பினும் தேசியம் பற்றி அவர் வைத்த நிலைப்பாடானது சோசலிச இயக்கங்கள் முன் வைத்த கற்பனாவாத்த தன்மையை விட மிகவும் ஓர் ஜதார்த்தமான நிலைப்பாட்டினைக் கொண்டவை என்றே கூறவேண் டும். லெனின் கூட சோசலிசப் புரட்சியின் பின் தேசியங்கள் தத்தமது தேசியத் தன்மைகளை இழந்து விடும் என்று கருதியிருக்கிறார். இங்கு வெளிப்படையான பாட்டாளிவர்க்கத்தினர் எந்த ஒரு பொருளாதார அடிப்படைத் தன்மையிலும் தத்தமது தேசிய தன்மை மீதான ஆர்வத்தினைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது கணிப்பிடப்படவில்லை. ஆகவே பாண்ஸ் இங்கே மார்க்ஸினதும் எங்கெல்சினதும் தேசியம் பற்றிய பிழையான நிலைப் பாட்டினை திருத்தியிருக்கின்றார் என்றே கூறலாம்.

ரோசா லக்சம்பேக்ஸ் தேசியம் பற்றிய மார்க்ஸிய சிந்தனையில் ஒரு தீவிரமான நிலைப்பாட்டினை வைத்திருக்கின்றார். தேசிய அரசுகள் என்பது ஓர் இடைநிலையானது, நிலையற்றது. இதில் தொழிலாளர் வர்க்கத்தினர் நேரடித் தொடர்பு எதுவும் அற்றவர்களாக இருக்கின்றார்கள். தேசியங்களுக்கிடையில் உள்ள தடைகள், எல்லைகள் மற்றும் தேசிய ஒடுக்கு முறைகளையும் தகர்ப்பதற்கு குறுகியதும் சிறந்ததுமான ஓர் வழி ஒட்டுமொத்தமான ஓர் சர்வதேசிய பாட்டாளிவர்க்க புரட்சியே என்று கூறுகின்றார். இங்கே தேசியங்களின் தேசிய சுயநிர்ணயத்தினை ஓர் சர்வதேச பாட்டாளிவர்க்க நிலைப்பாட்டிலிருந்து எதிர்த்திருக்கின்றார். இவரைப் பொறுத்த மட்டில் தேசிய சுயநிர்ணயம் என்பது பொதுவாக பல்வேறு வர்க்கங்களினை அடங்கியிருக்கும் சமூககங்களில் ஆளும் வர்க்கத்தின் ஓர் விடயமாக வெளிக்காட்டி இருக்கின்றார். இவரின் இத் தீவிர நிலைப்பாட்டினை லெனின் கடுமையாக விமர்சித்திருக்கின்றார்.

லெனினின் எழுத்துக்களுள் ஒன்றான தேசியம் பற்றிய கேள்வி (National Quetion) இல் தேசிய அரசிற்குரிய விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய அரசானது பூர்சுவாக்களின் மத்தியப் படுத்தப்பட வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலேயே உருவாகின்றது என்றுரைக்கப்படுகின்றது. மேலும் லெனின் கூறுகையில் கிழக்கு ஜரோப்ரபிய நாடுகளும் ஆசிய நாடுகளும் மேற்கு ஜரோப்பிய நாடுகளில் தேசிய அரசுகள் உருவாகியது போல் ஓர் பூர்சுவா ஜனநாயகப் புரட்சிக்குள்ளாக செல்ல வேண்டும் என்றும் ஆராய்ந்திருக்கின்றார். இத் தேசிய அரசின் தன்மை சர்வ தேச பாட்டாளி வர்க்க சோசலிஸ அமைப்பினை சிதைக்கப்படும் என்ற கருத்தினை வைத்திருக்கின்றார்.

திரு. செ. சிவசோதி

தற்கால அரசியல் போராட்டங்களில் சோசலிஸவாதிகளின் நிலைப்பாடானதும், ஈடுபாடானதும் அனைத்து ஜநனாயகத் தன்மை கொண்ட தேசிய விடுதலை இயக்கங்களை முற்று முழுதாக ஆதரித்தலாக இருத்தல் வேண்டும் என்று தேசியம் பற்றிய கேள்வி என்ற கட்டுரையில் தெளிவாக காட்டியுள்ளார்.

சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சியின் அடிப் படையில் போலந்து தேசிய சுயநிர்ணய போராட்டத்தினை எதிர்த்து ரோசா லக்ஒஸ்சம்.பேக்னரும் அவர்களின் சகாக்களும் எடுத்த நிலைப்பாட்டினை லெனின் வன்மையாக விமர்சித்திருக்கின்றார். மேலும் விளக்குகையில் ஏகாதிபத்தியத்தின் கீழும் தேசிய ஒடுக்கு முறைக்குக் கீழும் ரஸ்யாவினதும் போலிசினதும் தொழிலாளர்களின் ஒன்று கூடிய சோசலிசப் போராட்டத்தினை முன்னெடுக்க முடியாது , மாற்றாக சுயநிர்ணயப் போராட்டத்தினை மறுதலிப்பதன் மூலம் எதிர் சக்திகளை வலுப்படுத்துவதாகிவிடும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

சர்வதேசிய சோசலிசத்தினை நோக்கிச் செல்வதற்கு தேசியங்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலின் ஊடாகவே முன்னெடுத்தல் வேண்டும். அல்லது ஒரு தேசியம் இன்னொரு தேசியத்தின் மீது ஆதிக்கத்தினை செலுத்தும் போது ஒன்று பட்ட பாட்டாளிவர்க்கப் புரட்சி சாத்தியமறம்றது. இங்கே தேசிய சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போகும் உரிமை ஒன்றுதான் என்பது லெனினின் நிலைப்பாடாகும். இதில் லெனின் தேசியம் பற்றிய நிலைப்பாட்டினை வைத்து நிறுத்தியிகருந்ததுடன் தேசியம் பற்றிய பிரச்சனையில் உள்ள சமூகங்கள் மீது ஒரு அபிமானத்தை காட்டியிருந்தாரே அன்றி தேசியம் பற்றிய ஒரு சித்தாந்தந்தத்தினைப் பற்றிய ஆய்வினை வெளிக்கொணரவில்லை.

மேலும், லெனின் நிலைப்பாட்டில் இருந்த சில தளம்பல் நிலை அதன் தேசியம் பற்றிய ஆய்வு போதியளவாக இருக்கவில்லை என்பதினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது உலகமானது ஒரு சமமான, தூய தேசிய அரசுகளின் வளர்ச்சியை முதலாளித்துவம் இட்டுச் செல்கின்றது என்றும் தூய தேசிய அரசுகள் உருவாகுகையில் தேசிய எல்லைகள் அற்றுப்போகின்றது என்பது அவரின் பிரதான நிலைப்பாடு ஆகும். இந்நிலைப்பாடு மார்க்சிடம் இருந்து லெனினால் உள்வாங்கப்பட்ட ஓர் நிலைப்பாடாகும்.



மறுதலையாக முதலாளித்துவமானது தன்னகத்தே ஓர் சமனற்ற வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக இன்றைய ஜரோப்பாவில் உள்ள ஒவ்வொரு நாடுகளிலும் தேசிய அரசினுள் அடக்கப்படும் தேசியங்களும் தேசிய சிறுபான்மை மக்கள் தேசிய சுயநிர்ணய உரிமையை வேண்டி நிற்கின்றார்கள். பிரித்தானியாவில் வேல்ஸூம் ஸிகொட்லாந்து தேசியம் .

லெனின் பிரித்தானியாவுக்கும் ஸ்கொட்லாந்திற்கும் இடையிலான தொடர்பினை பார்த்திருக்கின்றார். ஆனால் பிரித்தானியா தன்னகத்தே ஒரு பல் தேசிய அரசு என்பதை அடையாளம் காணத் தவறியிருக்கின்ரார். இன்று பிரித்தானியா ஜரோப்பாவிலேயே மிகுந்த ஒரு பல்தேசிய அரசாகும்.

லெனினிற்குப் பின்பு இன்றுவரை ஓர் குறிப்பிடத் தக்க சித்தாந்த வளர்ச்சியானது தேசிய நிலைப்பாட்டில் உருவாகவில்லை. ஏனெனில் இரண்டு பிரதான காரணிகள் இதன் பின்னணியில் இருக்கின்றதைக் காணலாம். முதலாவதாக அரை

**எமது பத்திரிகை நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மார்க்ஸிஸமும் தேசியமும் கருத்தரங்கின் முதல் பகுதி இத்துடன் முடிவுற்றது. அடுத்த இதழில் திரு கேசவன் தயாரித்தளித்த பகுதி இடம்பெறும்**

நூற்றாண்டு காலமாக அமைப்பு வடிவமைக்கப்பட்ட மார்க்ஸிஸமானது தேசியம் பற்றிய போதியளவு சித்தாந்த வெளிப்பாடில்லாது இயங்கியிருக்கின்றது. இரண்டாவதாக எதிர்ப்பு இயக்கங்களின் மத்திய கூறு தேசிய வாதமாக இருந்தது. இக்கட்டத்தில் தேசிய வாதமானது நாஸிசத்தினையும் பாசிசத்தினையும் இட்டுச் செல்லும் ஓர் பயத்தினை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஸ்டானின் தேசியம் பற்றிய பார்வையை அவரின் மார்க்கிசமும் தேசியமும் பற்றிய கேள்வி என்ற கட்டுரைதனைப் பார்க்கும் போது பின்வருவன புலப்படுகின்றது.

1) பொது மொழி, பொதுவான பாரம்பரியப் பிரதேசம், பொதுப் பொருளாதாரம், பொதுவான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சேருகின்ற பட்சத்தில் தேசியம் உருவாகின்றது.

ஸ்ராலினது வரலாற்று ரீதியான காரணிகள் ஹஸ்கி, ஹெகல் இவர்களின் கருதுகோள்களில் இருந்து எடுக்கப்பட்டவையாக இருக்கின்றது.

தேசிய பௌதிகமானது ஒரு பொதுவான தனித்துவத்திலிருந்து உருவாகின்றது அல்ல . மேலும் பல்வேறு இதர காரணிகளினாலும் உருவாகின் றன என்பது ஆராயப்படவேண்டும்.

எவ்வாறு இருப்பினும் வரலாற்று ரீதியான தேசியம் என்பது ஒரு குறிப்பிட் ட தேசிய மனநோக்கு ஆனது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வரலாற்று நிலையில் எழும் ஒரு விடயமாக இருக்கலாம். ஆனால் இதனை ஒரு தேசியத்தினை அடையாளம் காண்பதற்கு ஓர் உலகளாவிய சித்தாந்தமாக்க முடியாது.

போலந்து, ரஸ்யா, ஜெர்மனி, ஒஸ்ரியா கீழ் மூன்று பட்ட அரசாக நூற்றாண்டு காலமாக இருந்திருக்கின்றது. அங்கே ஒரு பொது பொருளாதாரமோ அல்லது பொது மொழியோ இருக்க வில்லை. ஆனால் போலந்து தேசியமாக எவ்வாறு உருவாகியது.

இங்கு ஸ்ராலின் தனது சொந்த எழுத்தினை மறந்து போலந்தினை தேசியமாகப் பார்த்திருக்கின்றார். எனவே ஸ்ராலினின் பார்வையினை மார்க்ஸிசத்தின் ஒரு கருவியாக பாவித்து தேசியங்களின் பிரச்சனையை அணுகமுடியாது.

எனவே மேலே பார்த்த வெவ்வேறு மார்க்ஸிஸ வாதிகளின் தேசியம் பற்றிய பிரச்சனையில் அவர்கள் நிலைப்பாட்டிலிருந்து மார்க்ஸிஸமானது தற்போதைய உலகில் மிகவும் முன்னணி வகிக்கும் கருத்துப்பாடான தேசியம் பற்றிய போதியளவு பார்வையினைக் கொண்டிருக்காதது மார்க்கிஸ பாதையில் ஓர் பெரிய தோல்வி என்பதை உள்வாங்கிக் கொண்டு தேசியம் பற்றிய பிரச்சனையை பற்றி ஆய்வதற்கு மார்க்சிசத்திற்கு வெளியில் ஒரு பெரிய தேடலை நடாத்த வேண்டிய கட்டாய கடமைப் பாட்டில் நாம் இருக்கின்றோம். இதனை மார்க்சிச வாதிகள் செய்யத் தவறும் பட்டசத்தில் அவர்கள் மார்க்சிசத்தினை விஞ்ஞான பூர்வமாக இயங்கியலுக் கு ஊறு விளைவிப்பதாக இருக்கும். சமூக இயங்கியலில் தேசியம் பற்றிய எண்ணப்பாடு ஒரு வலுவான அங்கமாக இருப்பதினை நாம் எல்லோரும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எங்கெங்கு ஒடுக்கு முறை எழுகின்றதோ அங்கங்கு மார்க்சிஸம் முதலில் குரல் கொடுக்கத் தவறும் பட்டசத்தில் எதிர்சக்திகள் இதனை இன்னோர் எல்லைக்கு சமூகத்தை இட்டுச் செல்வார்கள்.

எனவே மேற் கூறிய விடயங்களைக் கருத்தில் கொண்டு தேசியம் பற்றிய பிரச்சனையில் உணர்வுபூர்வமான உண்மையான தேடலை மேற் கொள்ளுவதன் மூலம் மார்க்சிசத்தினை ஓர் உயிருள்ள, வலுவான சித்தாந்தமாக வளர்த்தெடுத்தல் வேண்டும்.

(முற்றும்)

## அகதிகளை பலவந்தமாகத் திருப்பியனுப்போம் சுவிஸ்

(கொழும்பு)

இலங்கை அகதிகள் சுவிஸிலிருந்து பலவந்தமாகத் திருப்பியனுப்பப்பட மாட்டார்கள் என்று சுவிஸ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகள் தொடர்பாக ஆராய வந்துள்ள முவரடங்கிய குழு உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். அண்மையில் சுவிஸ்நாட்டுக்கான தூதுவரின் அறிவிப்புக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளனர். சுமார் முப்பதாயிரம் இலங்கையரில் 16,325 பேருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து கிடைத்துள்ளதென்றும் எனையவர்கள் அவர்கள் விருப்பத்தின் படியே திருப்பி அனுப்பப்படுவர் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்கள். இக்குழுவினர் மன்னாரில் உள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்ததுடன் அம்முகாம் பற்றிய அறிக்கை ஒன்றை ஐ.நா. அலுவலகர்களிடம் சமர்பித்துள்ளனர்.

## புதியதேர் உலகம்

11ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்த்திச் சொன்னார்.

இன்று அந்த நம்பிக்கை ஈடாட்டம் காண குழம்பி நின்றான்.

ஆழ்ந்த யோசனையின் பின் பூபாலனின் அகன்ற விழிகளில் பார்த்துக் கொண்டு கூறினான்.

கழகம் ஒரு புரட்சிகர விடுதலை இயக்கம் என்று தான் இங்கு வர முன் நினைத்திருந்தேன். இப்பொழுது இதில் இன்னும் அராஜகப் போக்குத்தான் மேலோங்கியிருப்பது தெரிகிறது. தளத்தில் இருக்கும் போது இம்மாதிரி எதுவும் தோன்றாமல் இருந்தது ஆச்சரியம் தான்.

பூபாலன் அவசரப்பட்டு கைகளாலேயே அவனை அடக்கினான்.

விளம்பரக் கட்டணங்கள்

Full Page முழுப் பக்கம் ... £75.00

Half Page அரைப் பக்கம் ... £40.00

Quarter Page கால் பக்கம் ... £25.00

Inch Ads சிறு விளம்பரங்கள் ... £5.00

www.tamilarangam.net



The EelaBhoomi

# ஈழபூமி

ஆண்டு 1 வாரம் 15 21-08-1992

## உதவிக்கரம் நீட்டி - -

இன்று நாட்டில் நடக்கும் பிரச்சனைகளின் நிமித்தம் அகதிகளாக, அநாதைகளாக ஆதரவற்றவர்களாக லச்சக் கணக்கில் தமிழ் பேசும் மக்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். இருந்தும் நாம் ஆடம்பரத்திற்காக செலவு செய்யும் தொகை பணத்தில் ஒரு பகுதியை இந்த உயிர்களைக் காப்பாற்றக் கொடுப்பதற்கு எமக்கு மனம் வருவதில்லை.

பிறந்தநாள் கொட்டாட்டம், திருமண நாள் விருந்துபசாரம், திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழா என்று (அவசியமான) ஆனால் அர்த்தமில்லாத வகையில் பணத்தைக் கொட்டி போட்டிக்கு கொண்டாட்டம் நடத்தும் எமது ஈழ மண்ணின் அகதிகள் அங்கே ஒரு வேளை சாப்பாட்டிற்கு வழியில்லாமல் இருப்பவர்களை ஒரு கணம் சிந்திக்கத் தவறுவதன் காரணம் புரியவில்லை. மட்டக்களப்பில் உள்ள ஒரு அகதிகள் விடுதியில் மட்டும் 3000 விதவைகள் அன்றாட உணவுக்கு கஸ்ரப்படுகின்றார்கள். உடுத்த துணியை மாற்றிக் கட்ட அவர்கள் படும் வேதனை எழுத்தில் வடிக்க முடியாதது. கிராமத்திற்கு ஒரு அநாதை இல்லம் அங்கே குறைந்தது 25 சிறுவர்கள். அப்பா, அம்மாவை இழந்து உற்றார் உறவினரின் உதவி இழந்து எதிர்காலம் பூச்சியமாக இருக்க ஒரு பிடி உணவுக்காக ஊசலாடும் அந்தக் குழந்தைகள் அனுபவிக்கும் துன்பம் சொல்லில் அடங்காதது.

இந்த நாட்டிலே வந்து அகதிகள் என்ற நினைப்பே இல்லாமல் நாம் வாழும் வாழக்கையின் பின்னணி என்ன என்பதை ஏன் நாம் ஒருவரும் சிந்திக்கவில்லை. அவர்களுக்காக உலர் வலய அபிவிருத்தி ஒன்றியம் என்னும் சங்கம் அங்கே தன்னாலான உதவிகளைச் செய்து கொண்டிருக்க நாம் இங்கே அளவுக்கு அதிகமாக பியர் அருந்திவிட்டு நின்மதியாகத் தூங்குவது பற்றிச் சிந்திக்கக் கூடாதா?

அந்த ஸ்தாபனம் எந்த வித அரசியல் சார்பும் அற்றது. அந்த ஸ்தர்பனம் எம்மிடம் கேட்பது பத்துப் பவுண்கள் ஒரு மாதத்திற்கு. அந்த ஸ்தாபனம் பற்றிய தகவல்களை திரட்டுவதற்கு தமிழர் தகவல் நடுவத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் உங்களுக்குத் தேவையான சகல விபரங்களையும் அவர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். அங்கு ஆதரவற்று இருக்கும் ஒரு குடும்பத்தை நீங்கள் தத்தெடுத்து அவர்களின் குடும்பத்துக்கு தேவையான மாதச் செலவான பத்துப் பவுண்களை அனுப்பினால் போதுமானது. நீங்கள் அனுப்பும் போது வடக்கிலா கிழக்கிலா இருந்து தத்தெடுக்க விரும்புகிறீர்கள் என்பதைக் குறித்து அனுப்பினால் அந்த இடத்திலிருந்து உங்கள் பெயரில் தத்தெடுக்கப்படும் குடும்பம் பற்றிய விபரம் அந்த நபருக்கு அறிவிக்கப்படுகிறது. ஆகவே நீங்கள் அனுப்பும் பணம் உரிய முறையில் குறிப்பிட்ட பகுதியினைரைச் சென்றடைகின்றதா என்பதை அனுப்பு பவர்கள் கண்டுகொள்ளலாம்.

இதுவரை ஈழ பூமியின் வேண்டுகோளுக்கிணங்க 23 பேர் விண்ணப்பபபடிவங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அனுப்பி வைத்துள்ளோம். இதே போன்று கீழ்க்காணும் முகவரியுடனனோ அல்லது தொலைபேசியுடனோ தொடர்பு கொண்டு மேலும் உதவிகளைச் செய்ய முன் வாருங்கள் என்று எல்லோரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

**தமிழர் தகவல் நடுவம்**
**ஈஸ்ராம்**
**Tel : 081 514 6390**

# தமிழனும் தமிழ்க் கலாச்சாரமும்

## கோபமான ஒரு கடிதம்

தமிழ் குறித்தும் தமிழ் கலாச்சாரம் குறித்தும் தமிழனுக்கென்று ஒரு நாடு என்பது குறித்தும் மிகத் தீவிரமான இரைச்சல் கேட்கிறது.

பூமியில் நமது இடம் என்ன? சர்வதேசிய சிந்தனையில் மானுடத் தேட்டங்களில் நமது பங்களிப்பு என்ன என்பது குறித்த அக்கறையற்ற வெற்று ஆரவாரம் இது.

தமக்குள் தாய் மொழி எனும் அளவில் தமிழைப் பேசிக் கொள்வதில்லை. மனைவியோடு தமிழில் பேசுவது இல்லை. குழந்தைகளோடு தமிழில் பேசுவது இல்லை.. குழந்தைகளுக்கு தமது அடையாளம் எது என்று காட்ட வேண்டிய பொறுப்பு தாய்களுக்கு இருப்பதான நினைவு கூட இல்லை. மூச்சுக்கு முன்னூறு முறை தமிழ் இன விடுதலையை முக்கி முக்கி கர்ச்சிக்கிறார்கள். எதிலிருந்து விடுதலை? எதை நோக்கி விடுதலை? எதற்காக இந்த விடுதலை? எங்கே போய்சேர இந்த விடுதலை?

அடிமைத் தளையிலிருந்து அறுத்துக் கொண்டு மனிதநேயம் நோக்கிய பாதைதான் விடுதலை. இந்த விடுதலைக்கு கலாச்சாரம் முக்கியம். தமிழ் சிந்தனா அறிவு முக்கியம். தமிழ் மூளை முக்கியம். தமிழ் சிந்தனையின் அறிமுகம் கூட தமது பிள்ளைகளுக்கு தருவதில்லை. ஞாயிற்றுக்கிழமை இரண்டு மணிநேரம் தான் அரிச்சுவடி படிக்க சிறப்பு பாடசாலைக்கு குழந்தைகளை அனுப்புகிறார்கள். ஆனால் தமிழ்க் கலாச்சாரம் குறித்து வெற்று கூச்சல் மட்டும் மிக மிக வேகமாக கேட்கின்றது.

இந்த நூற்றாண்டுச் சிந்தனையில் உன் பங்களிப்பு என்ன?

ஆண்டபரம்பரையைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது அறிவீனம். விஞ்ஞான தொழிநுட்ப புரட்சியும் அரசியல் சிந்தனைகளும் அலை வீசி மீண்டும் எழும் நூற்றாண்டில் வாழும் நாம் சேர சோழ, பாண்டியன் குறித்து பேசிக்கொண்டிருப்பது அறிவீனம்.

ஈழத்து நிலைமை குறித்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம். ஈழத்தைப் புனர் நிர்மாணம் செய்வதாக பேசித் திரியும் ஐரோப்பியத் தமிழர் குறித்துத்தான் நாம் தற்போது மிகத் தீவிரமாக யோசிக்க வேண்டும்.

கவிஞர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்தாயிற்று. சிவரமணி மாதிரி கவிதாப் பெண்மணிகள் தற்கொலைக்குத் தள்ளப்பட்டாயிற்று. அறிவாளிகள் அடையாளம் அற்ற நபர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு தெருக்களில் மரணமுறுகிறார்கள். சிந்தனை மூடுண்ட உலகமாகிவிட்டது. மனச்சாட்சி உள்ள மனிதன் தினம் தினம் மடிந்து எழுகின்றான்.

மகாகவி பற்றி அறிமுகம் இல்லை. அவைக்காற்றுக் கழகம் இவர்களுக்கு அந்நியம். பாரதி என்றொரு மனிதன் இருந்தான் என்பது இந்தத் தமிழனுக்குத் தெரியாது. இதை மனம் விட்டுப் பேசும் நேரம் கூட தங்களுக்கு அரிதாகிவிட்டதாகப் பேசித்திரிகின்றார்கள்.

ஜரோப்பிய சிந்தனையாளர்களைத் தெரியாது. ரேமண்ட வில்லியம்ஸை, பெர்ட்ரஸ்ஸல் என்கின்ற

### கோபம் . . . . .

ஆங்கிலேயத் தத்துவவாதியை, போனி பென் எனும் சமகால அறிவுஜீவியை தெரியாது. ஆசிய, ஆபிரிக்கப் படைப்பாளிகளை பக்கத்து தெருவில் பக்கத்துவீட்டில் இருக்கும் கலைஞர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறை கிஞ்சிற்றும் இல்லை.

உலகின் மிகச்சிறந்த சினிமாக்கள் இங்கு கிடைக்கும் என்கிற நினைப்புக் கூட இல்லை. மூன்றாந்தர ஆங்கில நடிகன் பெர்ப் ரனால்டை தெரிந்த ஒரு தமிழ் CIMA மாணவன் பெர்ட் ராண்ப் ரஸ்ஸல் நடிகன் என்று சொல்ல முடிகிறது. நச்சுக் கலாச்சாரத்தை அழித்து புதிய கலாச்சாரம் ஆக்கப் புறப்பட்ட துக்ளக்கை, குமுதம் பத்திரிகையைத் தடை செய்யும் புனிதர்களின் பிரதிநிதிகள் தான் தான் இங்கு குமுதம் கலாச்சாரத்தின் விநியோகஸ்தர்களாக இருக்கின்றார்கள்.

கொஞ்சமேனும் பிரச்சனைகளைச் சொல்லும் பாலச்சந்தர், பாரதிராஜா படங்கள் கூட இங்கு வெளியிடப்படுவதில்லை. பேசப்படுவதில்லை. பாண்டியராஜனும் பாக்கியராஜூம் செம்பருத்தி பட நாயகியும் தான் இங்கு இளைஞர்களின் ஆதாரமாக இருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டுத் தெருக்களில் வீசப்படவேண்டிய களிசறைப் பத்திரிகைகள், புத்தகங்கள் இங்கு தமிழனின் கலாச்சாரப் பலாமாகக் கடைகளில் கிடக்கிறது. மிகக் கொச்சையான நடிக நடிகளின் நிகழ்ச்சி வசூல் பிரமுகர்கள் தான் இங்கு புதிய கலாச்சாரப் போர் வாள் வீசும் மன்னர்களாக இருக்கின்றார்கள்.

வெறுமனே ஒரு பவுண் அளவுக்குப் பிரிட்டனில் இருப்பதால் நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்வதோ நகைகளைச் சுமப்பதோ தமிழ் கலாச்சாரம் ஆகாது. கோயில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதோ இடுப்பில் துண்டு கட்டுவதோ தமிழர் கலாச்சாரம் ஆகாது.

அம்மா என்று தமிழில்அழகாகத் தமிழில் சொல்லிக் கொடுங்கள். முருகன் என்றால் அழகு என்று தமிழ் கூறுகின்றது ,என்று சொல்லிக் கொடுங்கள். கோபம் கொள் என்று சொல்லித் தாருங்கள்.


புதிய மானுட மதிப்பீடுகளுக்கு கலாச்சார உலகுக்கு உமது பங்களிப்பு என்ன?

மனச்சாட்சி சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வு உலகெங்கும் அலையாக்குகையில் நீ எங்கே நிற்கின்றாய்.

நக்கீரன் இங்கு பொறுக்கிய அரசியல் பேசுகிறவனாக வேசந் தரித்திருக்கிறான். தமிழன் இங்கு பாலுறவுக் கொச்சைகளை இலக்கியம் என்று எழுதிக் காட்டுகிறான்.

பாரதி மாதிரி நெஞ்சு நிமிர்ந்த அறிவாளிகளும் கலைஞர்களும் அரிதாகத் தெரிகின்றார்கள். கோழைகளாகித் தவிக்கிறார்கள்.

தமிழர் கலாச்சாரம் பற்றிக் கதைப்பவர்கள் தமிழ் சிந்தனையை உலகுக்கும் உலகச் சிந்தனையை தமிழுக்கும் கொண்டு வாருங்கள்.



வெறும் கணக்காளர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்குகிற ஒரு சமூகம் ஆள நினைக்கிற சமூகம் அடிமை கொள்ள நினைக்கின்ற சமூகம் ஆட்டிவிக்க நினைக்கின்ற சமூகம்.

மானுட விடுதலைச் சிந்தனைக்கு பிரான்சையும், ஜெர்மனியையும் எதிர் நோக்கி நிற்கும் பிரிட்டிஸ் ஏகாதிபத்திய சமூகத்தின் போக்குத் தான் இன்று தமிழனின் மனப் போக்கு.

இவனது கனவில் யாழப்பாணம் இலங்கையின் சிங்கப்பூர் பொது மது விடுதிகளும் லட்சக் கடைகளும் எலெக்ரோனிக் .பொருட்களும் நகைக் கடைகளும் இரவு விடுதிகளும் மலிந்த போக நகரம் உலகின் சீரழிந்த கலாச்சார நகரான சிங்கப்பூரின் பிரதி.

எதிர்வரும் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனையை இந்த ஜரோப்பிய தமிழர்கள் மிக வேகமாகத் திட்டமிட்டு உருவாக்கி வருகிறார்கள். தமது குழந்தைகள் இங்கு அடையாளமற்றுத் தவிக்கின்றது. குழந்தைகள் மனோ வளர்ச்சி அற்றுத் தவிக்கின்றார்கள். தாத்தா பாட்டிகளோடு எதைப் பேசுவது என்று தெரியாமல் விழிக்கின்றது. ஏன் இந்த வெள்ளை நிறத்தவன் தன்னைப் பாக்கி என்று வெறுக்கின்றான் என்ற வரலாறு தெரியாமல் திணறுகின்றது.

தமிழன் தான் பாக்கியை விட மேன்மையான ஆசியன் என்று அயோக்கியத் தனமாதப் பேச நினைக்கின்றான்.

தனது குழந்தைகளுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் ஆங்கிலக் கல்வியும் பல்கலைகக் கழக கனவுகளையும் நாளெல்லாம் அலசும் இவர்கள் சயனைடு குப்பிகளில் சாகும் பச்சிளம் பாலகர்களை பற்றி உலக தத்துவ அரைகுறை ஞான வியாக்கியானம் வழங்குகிறார்கள். தமது பிள்ளை தமிழ்பேச கூச்சப்படுவதை தமிழே பேசமுடியாமல் இருப்பதை பெருமையோடு சொல்கின்றார்கள்.

மிகத் தீவிரமாக ஈழ விடுதலை பற்றிப் பேசும் அறிவாளிகள் கூட தமது குழந்தைகள் என்று வருகிற போது தமிழில் குழந்தை சிந்திக்க ஆரம்பிப்பது ஆங்கில வாழ்க்கைச் சூழலில் குழந்தைகளுக்கு நிறையப் பிரச்சனைகளைக் கொண்டு தருகிறது என்கிறார்கள்.

(தொடரும்)

# அன்புள்ள நண்ப!

அன்புள்ள நண்பனுக்கு!

உன் கடிதம் கண்டபோது ஆனந்தமும் அதிர்ச்சியும் அடைந்தேன். நீ எழுதியவற்றிலே பொதிந்து கிடந்த உண்மையை உணர்ந்தேன். கூடவே உன் அடி மனதிலே போராட்டம் நடத்தும் உன் மனச்சாட்சியையும் கடிதத்திலே கண்டேன்.,

நண்பனே! உன் வாதங்களும் அதன் பின்னே பொதிந்திருக்கும் எண்ணப்பாடுகளும் எனக்குப் புரிகின்றது. ஆனால் உன்னைப்போலவே உன்னுடன் இருக்கும் நூற்றுக் கணக்கான இளைஞர்களும் இதய சுத்தியோடு காலத்தை ஓட்டுகின்றார்களா என்பது எனக்கு இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

உன்னைப் பொறுத்தவரை உன் வீட்டுச் சூழ் நிலையும் அத்தோடு கூடிய நாட்டு நிலைமையும் உன்னை அந்நிய இராணுவ முகாமிலே தஞ்சம் அடைய வைத்திருக்கலாம். அதே போல உன்னுடன் இருக்கும் இளைஞர்கள் இதய சுத்தியோடு நிலையின் தவிர்க்க முடியாத காரணத்தின் நிமித்தம் அங்கே தஞ்சம் புகுந்திருக்கின்றார்கள் என்று நீ கூற முற்பட்டால் அதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

புலிகளைப் பழி வாங்குகின்றோம் என்ற போர்வையில் எடுத்துக் கொண்ட இலட்சியம் என்ன? இன்று நடந்து கொண்டிருப்பது என்ன என்ற நிலவரம் தெரியாது அரச படைகளுடன் சேர்ந்து அட்டாகசம் பண்ணும் எத்தனையோ இளைஞர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என்பதில் உனக்கு எந்த வித ஆட்சேபனையும் இருக் காது என்று எண்ணுகின்றேன்.

நண்பனே! அண்மையில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. மட்டக்களப்பில் இருந்து வந்த கடிதம் அது. அந்தக் கடிதத்தில் இருந்த சில அம்சங்கள் என் நெஞ்சைப் புண்ணாக்கின. நீ சில வேளைகளில் கேள்விப்பட்டிருக்கலாம். இருந்தாலும் அதனை உனக்குச் சொல்ல வேண்டியது எனது கடமை என்று எண்ணுகின்றேன். வளவா! இராணுவ முகாமிலே இருக்கும் ரெலோ என்னும் ஒரு இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவத்திற்கு பெண்பிள்ளைகளைப் பிடித்துச் சென்று கொடுத்துப் பலி வாங்கும் படலம் பல காலமாக நடக்கின்றது என்பதே அது.

உற்றார் உறவினர்களை இழந்து உண்ண ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் முஸ்லிம் ஊர்காவல் படை ஒருபுறம் இராணுவம் ஒரு புறம் என்று தினந் தோறும் அல்லபடும் அப்பாவிப் பெண்களின் வாழக்கையை சீரழித்து சின்னாபின்னமாக்கி அவர்களை அவமானத்துக்குள்ளாக்கும் அந்த இயக்க கனவான்கள் அக்கா தங்கச்சியுடன் பிறக்கவில்லையா? இராணுவத்தின் எச்சில் சோற்றினை நக்குவதற்காக இவர்கள் தாயையயும் கடத்திக் கொடுக்க மாட்டார்கள் என்பதில் என்ன நிச்சயம்?

இதனை நீ என்ன என்று சொல்கின்றாய். இவர்கள் மனச்சாட்சியை அடகு வைத்து வருடங்களாகிவிட்டது. அது மட்டுமல்ல இவர்கள் நடுத் தெருவிலே சுட்டுக் கொல்லப் பட வேண்டியவர்கள் என்பதில் என்கு எந்த வித முரண்பாடுகளும் கிடையாது.

நண்பா! இன்று போராட்டம் எங்கோ ஒரு திசையில் முடிவு தெரியாமல் போய்க்கொண்டிருக்கும் போது இவர்களைப் போன்றவர்கள் போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்காவிட்டாலும் பரவாயில்லை அந்த அப்பாவிப் பெண்களின் கண்ணீருக்கு ஆளாகாமல் இருக்கக் கூட கற்றுக் கொள்ள முடியாதா?

நண்பனே! உன்நிலைகளில் இருந்து பார்க்கும் போது நீ சொல்லியது போன்றே நாங்கள் சுயநலத்தின் உச்சியில் இருந்து கொண்டு தத்துவம் கதைப்பவர்கள் தான். அண்மையில் கிழக்கு மாகாணத்தில் அகதிகளாக, அநாதைகளாக, விதவைகளாக இருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உங்களால் முடிந்த பணத்தை கொடுத்து உதவுங்கள் என்று எனக்குத் தெரிந்த ஒருவரிடம் கேட்டேன். அவர் சொன்னார் அங்கை இருக்கும் சனம் செத்துத் துலையட்டும் நீ உன்னுடைய வேலையைப் பார் என்று. இப்படி பட்டவர்களும் இங்கு இருக்கின்றார்கள் என்பதை நான் எற்றுத்தான் ஆகவேண்டும். சாப்பாட்டுக் கு உத்தரவாதம் இருக்கும் ஒருநாட்டில் இருந்து கொண்டு, மீசையிலே நுரை படக்கூடிய அளவிலே பியர் கான் களை உறிஞ்சி இழுக்கக் கூடிய ஒரு நாட்டிலே இருந்து கொண்டு, நீலப் படங்களை கொண்டுவந்து நாலுபேருடன் இருந்து ரசித்துப் பார்க்கக் கூடிய ஒரு நாட்டில் இருந்து கொண்டு நாட்டில் இருப்பவர்களை குறை சொல்வது மிகமிகச் சுலபம் என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது நண்பா. இருந்தும் உன்னால் முடிந்தளவுக்கு எமது இனத்திற்கு துரோகம் செய்யாமல் இருக்கக் கற்றுக் கொள். எப்படியாவது இனத்தை அழித்மது ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டி நிற்கும் அரச படைகளின் அணைப்பிவலிருந்து உன்னை விடிவித்துக் கொண்டு எங்கோ ஒரு கோணத்தில் போய் இருந்து உன் வாழ்க்கையைத் தொடர் வாய் என்பது மட்டுமே என்னால் கூறக்கூடிய அறிவுரை

அன்புடன்

உந்து முகவரி மாறிய நண்பன்


புவி

வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. தொடர்புகட்கு
The Eelabhoomi Puplications
Unit 2. (Publishing Division)
Glenville Mews
Kimber Road
London SW18 4NJ

# திசை மாறிய "பா" க்கள்

தமிழ் சினிமா உலகம் பற்றிப் பேச வேண்டுமானால் நாம் உடனே தென்னிந்தியாவுக்குச் சென்று விட வேண்டும். ஆரம்ப காலங்களில் ஓரிரு படங்கள் இலங்கையிலும் தயாரிக்கப்பட்டன என்றாலும் இன்று ரசிகர்கள் மனதில் நிலைத்து நிற்பது இந்தியச் சினிதான்.

வித்தியாசமான கருத்துக்களைக் கூறப் புறப்பட்டு அத்தியாயங்களைத்தொலைத்து விட்டு நிற்கும் இரண்டு இயக்குனர்கள் எங்கள் பார்வைக்குள் அகப்பட்டுள்ளார்கள். பாரதி ராஜா என்கின்ற கிராமத்தின் மண் வாசனையை வெள்ளித் திரைக்கு கொண்டு வந்த




மனிதர். பாலசந்தர் என்கின்ற புரட்சிகர சிந்தனையை புதிய முறையிலே புகுத்த வந்த வித்தியாசமான இந்தியர். இவர்கள் இருவருமே தமிழ் சினிமாவின் இரண்டு துருவங்கள் போன்றவர்கள்.

சாதிவெறியிலும், பெண்ணடிமைத் தளையிலும் சமூக ஊழல் லஞ்ச பிரபஞ்சத்திலும் மூழ்கிக் கிடக்கும் தென்னிந்திய சமூகத்தில் தங்களால் முடிந்த மாற்றத்தைக் கொண்டு வரப் புறப்பட்ட இந்த இரண்டு

துருவங்களும் இன்று திசை தெரியாது தவிக்கின்றன.

ஆம், பாரதி ராஜா என்ற இயக்குனர் மக்களுக்கு அறிமுகமானது ஒரு சிறிய கிராமத்திலிருந்து. அந்த கிராமத்தில் அன்று அவர் எதிர் நோக்கிய பிரச்சனைகளை தனது இயக்கதில் அழகாகக் காட்டினார். அவருடைய திறமைக்கு அமெரிக்க மண்ணிலே பாராட்டுக் கிடைத்தது. அவர் அவதரித்த புண்ணிய பாரதத்தில் கிடைக்கவில்லை. அவர் இயக்கிய வேதம் புதிது இரண்டு வாரங்கள் மட்டுமே ஓடியது. சமயம் என்பது மக்களை வழி நடத்தும் கருவியாக இருக்க வேண்டுமே தவிர மக்களை வெறியர்களாக்கும் கருவியாக இருக்கக் கூடாது என்று புது விதத்திலே அருமையான ஒரு கதையை இயக்கிய பாரதிராஜாவை அந்த ஜனங்கள் வரவேற்கவில்லை.

மனதில் உறுதி வேண்




டும் என்ற ஒரு படம் உங்கள் ஞாபகத்திற்கு வரலாம் பாலச்சந்தர் என்னும் இயக்குனர் சிகரம் இயக்கிய அந்தப் படம் இந்தி ய தமிழ் சமுதாயத்தில் பெண்களுக்கு இருக்கும் பிரச்சனைகளை துல்லியமாக எடுத்துக் காட்டியது. ஆனால் அவரது படத்திற்கு கிடைத்த வரவேற்பு அந்த ரசிகரின் மனத்தில் இடம் பெறவில்லை.

அரைகுறை ஆட்டமும் இதழோடு இதழ் இணையும் முத்தக் காட்சியும் பறந்து பறந்து அடிக்கும் சண்டைக் காட்சிகளும் மலிந்து விட்ட சினிமாவுக்காக அலையும் ஒரு புதிய சினிமா நாகரீகத்தில் புரட்சியும் புதுமையும் தோற்றுப் போயின.

பாலச்சந்தர் தன்னை

7ம் பக்கம் பார்க்க



பஞ்சு அருணாசல
எழுதி, இயக்கி வெளிவ
திருக்கும் படம் கலிகால
நீண்ட காலத்திற்குப் பி
ஒரு குடும்பப்பாங்கான ப
மாக இது தயாரிக்கப்ப
டுள்ளது. அருமையா
இயக்கப்பட்டிருக்கு
இந்தப் பட
ஆபாசங்களுக்கு இட
கொடுக்காமல் குடும்ப
தோடு பார்க்கக் கூடி
அளவிற்கு தயாரிக்கப்பட்
ள்ளது.

அடுத்து வர இருக்கின்ற நண்பன் என்கின்ற ரஜனியின் படத்தின் பெயரை ஜில்லாக் கலக்டர் என மாற்றச் சொல்லியிருக்கிறார் ரஜனிக்காந்த். அரசியலில் குதிக்கும் எண்ணம் இல்லை என்று இவர் கூறியிருந்தாலும் தற்போது உருவாகி வருகின்ற படங்களில் வருகின்ற கருத்துக்கள் எல்லாம் ரஜனியின் விருப்பின் பேரிலேயே உருவாக்கப் படுகின்றன என்பது வெளிப்படை. என்ன இதைக் கேட்டதும் உங்களுக்கு எம்.ஜி.ஆர் ஞாபகம் வரவில்லை. ———

www.tamilarangam.net



## காட்டிலே..........

7ம் பக்கத்தொடர்ச்சி

இவ்வளவு காலமும் எனக்குத் தெரியப் படுத்த வில்லை என்றான் அரசன். 'ஓ.... அன்புக்கும் பண பிற்கும் உரிய மகா ராஜா அவர்களே! தங்கப் புதையலா? அப்படி நாங்கள் எதுவும் எடுக்க வில்லை என்றான் கந்தன். இல்லை நீ பொய் சொல்கின்றாய். உண்மை சொல் அல்லது உன் தங்கப் புதையலைப் பறிப்பது மட்டுமல்லாமல் உன்னையும் சிறையில் வைப்பேன் ' என்றான் அரசன். அரசே நான் இந்தப் புண்ணிய பூமியில் பிறந்தவன். எவருக்கும் எந்தக் கெடுதலும் செய்யாதவன். எப்போதும் நேர்மை வழியில் நடப்பவன். அப்படிப்பட்ட நான் பொய் சொல்வேனோ' என்றான் கந்தன் 'இல்லை அது உண்மை உன் மனைவியே இச் செய்தியை ஊரெல்லாம் பறையடித் துள்ளாள். உன் ஊரவர்கள் தான் எனக்குத் தகவல் தந்தார்கள்' என்றான் அரசன். 'என் மனைவியா? அவள் சாதுவான பைத்தியம். அப் பைத்தியத்தினால் நான் படும் பாடு போதாது என்று இப்ப இது வேறு எனக்குத் தேவை தானா? அரசே அவள் சொன்னதை நம்பாதீர்கள். அவள் சொல்வது யாவும் பொய்யே! அவள் ஒரு சுத்தப் பைத்தியம்' என்றான் கந்தன். இதைக் கேட்டு கோபம் கொண்டாள் கமலா. 'யார் பைத்தியம் உன்னை விட எனக்குப் பைத்தியம் கூடவா! நீதான் பைத்தியம். நீ அன்று புதையல் எடுத்தது உண்மைதானே' என்றாள் கமலா. நல்ல பெண்ணே! பெண்கள் என்றும் உண்மை பேசுபவர்கள். அதைத்தான் நான் நன்கு அறிவேன். 'கணவன் எப்போது புதையல் எடுத்தான். அதை எங்கு வைத்திருக்கின்றான்' என்று கேட்டான் அரசன்.

' அது நாம் காட்டிற்குள் மீன் பொறுக்கப் போவ தற்கு முதல் நாள் நடந்தது. நாம் புதையலை வீட்டு வாசலின் முன் புதைத்து வைத்திருக்கின்றோம்' என் றாள் கமலா. ' காட்டிலே மீனா? ' என வியப்புடன் கேட்டான் அரசன்.

'ஆம் வேந்தே மீன் மட்டுமல்ல, தேக்க மரத்தின் கிளைகளில் இனிப்புக் கூடைகளும் முயலும் கிடை த்தன. ' என்று பெருமையுடன் கூறினாள்.

இதை எல்லாம் கேட்ட அரசன் அவளுக்குப் பைத்தியம் என்பதைப் புரிந்து கொண்ட போதிலும் தனது சேவகர்களை அழைத்து புதையல் புதைத்த இடத்தை தோண்டிப் பார்க்கும்படி கூறினான். அவர்கள் அங்கு சென்று தேடி எதுவும் கிடைக்காமல் வெறுமையுடன் திரும்பி வந்தனர். அரசன் தான் செய்த தவறை மன்னிக்கும் படி கந்தனிடம் கூறிவிட்டு அவனுக்கு ஒரு சில அன்பளி ப்புக்களையும் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினான்.

அன்று முதல் அவன் மனைவி மற்றவர்களுடன் வாயே கொடுக்காமல் சுகமாக வாழ்ந்து வந்தாள். கந்தன் புதையலை எடுத்து பகுதி பகுதியாக விற்று நாளடைவில் பெரிய பணக்காரன் ஆனான்.

வித்தியா ...... 8ம் பக்கத் தொடர்ச்சி.

கதவின் அருகே வந்து நின்று கொண்டாள் வித்யா. வித்யாவுக்கு இப்ப கலியாணமோ? அவள் படிச்சு முடிக்கட்டும். இதுதான் அவளின்ர அண்ண னுடைய வருப்பமும் . அதுக்கு இப்ப அவசரமில்லை. என்று ஒருவாறாகத் தட்டிக் கழித்தது அவளுக்கு சந்தோசத்தைக் கொடுத்தது.

சில நிமிடங்கள் இதே சம்பாசணை தொடர்ந்தது. பின் சுந்தரலிங்கம் பரஞ்சோதியுடன் கடை வரைக் கும் போய் வருவதாய் மனைவியிடம் கூறிவிட்டு புறப்பட்டார்.

வித்யா தனது அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டாள். ஏற்கெனவே விரித்து வைத்திருந்த இலக்கிய புத்தகத்தின் ஏற்றையை ஒவ்வொன்றாக பிரித்துப் பார்க்கத் தொடங்கினாள். இலக்கியங்களில் இலக்கிய கர்த்தாக்கள் ஏன் பெண்களை மட்டும் வர்ணித்தனர். ஆண்களின் அழகை மட்டும் ஏன் வருணிக்கவில்லை. பழைய இலக்கியங்களின் ஆசி ரியர்கள் ஆண்களாக இருப்பதனால்த்தானா ஆண் களை வருணிப்பதற்கு இனிப் பெண் கவிஞர்கள் தான் உருவாக வேண்டும். என பலவாறு எண்ணிய வித்யா என் மாதவன் எவ்வளவு அழகானவர். அவர் உள்ளத்தின் தூய்மை வர்ணிக்க முடியாத அளவு என கற்பனை உலகத்தில் சஞ்சரித்த வித்யாவை நித்ராதேவி முற்றாக ஆட்கொண்டாள்.

மாதவன் படிப்பெல்லாம் முடித்து விட்டு மாங்குளம் என்னும் இடத்தில் உள்ள பாடசாலையில் அதிபராக நியமனம் பெற்று கடமைபுரிந்து கொண்டி ருந்த நேரம் வித்யா ஆசிரியர் தொழில் கிடைத்து ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். அப்போதுதான் இந்தத் தீபாவளி அன்று மூன்று வருடங்களுக்கு முன் இந்தச் சம்பவம் நடந்தது. மாவீரர் தினத்தை ஒட்டி நடந்த பேச்சுப் போட்டிகள் ஓட்டுசுட்டான் வித்தியாலயத்தில் நடை பெற்றுக்கொண்டிருந்தவேளை அன்று மேற்கொள் ளப்பட்ட பொம்பர் தாக்குதலில் இறந்த பதினமூன்று பேரில் அவளது மாதவனும் ஒருத்தன். இதில் காய மடைந்தவர்களின் எண்ணிக்கை பலவாகும். வித்யா மாதவனைப் பார்த்தபோது அவனது இடக்கால் முறிந்த நிலையில் தலையில் பலத்த காயங்களுடன் அவனது தோற்றமே மாறிய நிலையில் அவன் பிண த்தைக் கண்டாள். அவள் அழுதாள். மாதவனின் இழப்பைத் தாங்க முடியாது தவியாய் தவித்தாள். ஆனால் இவை அனைத்தையும் அவள் வெளியில் காட்ட முடியாது தன் மனதுக்குள் எண்ணி வெந் தாள்.

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த அந்தச் சமபவத்தினின்றும் அவள் மெல்ல விடுபட்டாள். அம்மாவின் குரல் கேட்டு வரவேற்பறைக்குச் சென்ற வித்யா அவள் தோழி ராதாவைக் கண்டு உள்ளம் பூரிக்கலானாள். ராதாவும் வித்யாவும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். என்ன ராதா போன கிழமைதானே வந்து? போனாய் என ஆச்சரியத்துடன் விநவினாள். உறவினர் ஒருவரின் திருமணத்திற்கு வந்த கார ணத்தை கூறிய ராதா உன் திருமண விடயம் எப்படி லண்டன் போவதாய் முடிவெடுத்தாச்சுதா? என்று கேட்டாள். வித்தியா பதிலின்றி நின்றாள்.

மாதவன் இறந்து ஒரு வருடத்திற்குப் பின் தனது பயிற்சியை முடித்துக் கொண்டு வித்யா தான் பயின்ற பாடசாலையிலேயே ஆசிரியை ஆனாள். ஓய்வு பெ ற்ற சுந்தரலிங்கம் மாதவனின் இறப்பைப் பற்றி கவ லைப்பட்டாலும் மாதவனை வித்யாவுக்கு திருமணம் செய்து வைக்க நினைத்திருந்தாலும் வித்யாவுக்கோ வேறு யாரிடமோ அதைத் தெரியப்படுத் தவில்லை. இதுவரை வித்யாவுக்குக் கேட்டு வந்த திருமணங் களை வித்யா சாட்டுச் சொல்லி கழித்து விட்டாள். ஒரு நாள் அம்மாவிற்கு தான் மாதவனை நேசித்த தையும் அவனைக் கணவனாய் ஏற்றுவிட்டதையும் சொல்லி அழுது தீர்த்தாள். அம்மா இதை சிறிய விட யமாய் எண்ணி அப்பாவிடமே சொல்லாது மறைத்து விட்டாள்.

காலச் சுழற்சியோடு நாம் பலதரப்பட்ட மனிதரைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வாறு அறிமுக மானவன் தான் ராகவன். ராதாவின் சகோதரியின் திருமணத்திற்குப் போயிருந்த போது இடது கால் எடுக்கப்பட்டு செயற்கைக்கால் பொருத்தப்பட்ட ஒரு இளைஞனை அவதானமாய்ப் பார்க்கின்றாள். நெடுங்கேணியில் தபால் அதிபராகக் கடமையாற்றும் ராகவன் இரண்டு வருடங்களுக்கு முன் தமிழ் இளை ஞர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் வவுனி யாவில் நடந்த சண்டையில் அகப்பட்டுக் காயமடை ந்தவர்களுள் ஒருவன் என்பதையும் அவனைப் பற்றி யும் ராதா அவனைப் பற்றி வித்யாவிடம் அறிமுகம் செய்து வைத்தாள். இறந்து போன மாதவனின் மறு வடிவமே இவனோ என்று பிரமித்துப் போனாள் வித்யா. இதன் பின் இவர்களுக்கிடையில் பல சந்திப் புக்கள். ஒரு முறை இராகவன் வித்யா வீட்டுக்கு வந்து போயிருக்கிறான்.

தேனீருடன் வந்த வித்யாவின் தாயார் என்ன இர ண்டு பேரும் பேசாமல் இருக்கிறியள் என வினவ இருவரும் அதிர்ச்சியுடன் ஒருவரையொருவர் பார்த் துச் சிரித்துக் கொண்டனர். தாயார் சென்ற பின்னர் ராதா நான் சொன்ன விடயம் பற்றி இராகவ னிட்டையும் குடும்பத்திட்டையும் கேட்டனியே என வினவினாள். அவர்கள் தங்கள் பூரண சம்மதத்தை தெரிவிச்சிட்டினம் என்றாள் ராதா.

லண்டனில் இருக்கும் வித்யாவின் அண்ணன் லண்டனில் அவளுக்கு திருமண் செய்து வைப்பதற்கு முடிவெடுத்து உடனடியாக வித்யாவை அனுப்பும் படி சொல்லிவிட்டான். ஆரம்பத்தில் மகளை தூர தேசம் அனுப்புவதற்கு விரும்பாத சுந்தரலிங்கம் இறு தியில் சம்மதித்து விட்டார். அம்மா இதனை வித்யா வுக்கு கூறியதுடன் இதற்கு எத்தடையும் விதிக்கக்கூ டாது என்று உறுதியாகவும் கோபத்துடனும் கூறிவிட் டாள். அவளுக்கு லண்டனுக்குப் போவதை விட ராகவனைச் செய்வதையே விரும்பினாள்.

மறுநாள் காலை ராதாவை வழியனுப்பிய வித்யா வெளியே தெரிந்த வளைந்து நிற்கும் தென் னைமரங்களைக் காண்கின்றாள். ஆம், அவை வளர முடியும் அவை வளர்ந்து எத்தனையோ பேருக்கு நன்மையுண்டு. மாதவனின் நினைவுடன் வாழ விரும் பிய அவளை வற்புறுத்தும் பெற்றோருக்கு இனிமேல் அவளால் எதுவும் கூற முடியாது. நிச்சயம் அவள் தனக்காக வாழப்போவதில்லை. இன்னொருவனுக் காக வாழத் துணிந்து விட்டாள். அது ஒருவனுக்கு நன்மையாய் அமைவதை அவள் மிகவும் பெருமையுடன் வரவேற்கிறாள். கால் இழந்த ராகவ னை மணக்க அவள் எண்ணிவிட்டாள். பெற்றோரி டம் இது பற்றிய விடயத்தைத் தெரிவிக்கப் போகின்றாள். அவர்கள் மறுப்புத் தெரிவித்தால் இரா கவனின் பெற்றோரின் விருப்புடன் அவள் அவ னையே திருமணம் செய்யப் போகின்றாள். வித்யா உனது முடிவு சரியானதே. மாதவனின் ஆத்மாவின் எதிரொலி அவள் காதுகளுக்குள் ஒலிக்கின்றது. வித் யாவில் எதுவித மாற்றமும் இல்லை. ஆம், வித்யா முடிவெடுத்து விட்டாள்.

**ஆர். எஸ். லிங்கம்**

# கனடாவில் பெண்கள் சமஉரிமை கோரி விசித்திரமான போராட்டம்

கனடாவில் நடந்தது இந்தச் சம்பவம். ஆண் களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்ற கோசம் அடக்கப்படும் நாடுகளில் எழுப்பப்பட்டு வருவது இப் போது பரவலாக நடக் கின்றது. இவ்வாறு ஆண்க ளுக்கு சமமாக பெண்களும் உரிமையை அனுபவிக்கும் பொருட்டு பல நாடுகளில் சட்டத்தினையே மாற்றி அமைத்திருக்கும் சம்பவங் கள் நடந்துள்ளன.



Another constitutional question

இங்கே கனேடிய நாட்டுப் பெண்கள் வித்தி யாசமான ஒரு சரிநிகர் உரிமைக்காக இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் ஒரு அமைதியான ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர். ஆண்கள் தமக்கு வேண்டிய வேளைகளில் (குறிப்பாக சூடான காலத்தில்) காற்றோ ட்டமாக இருப்பதற்கு தமது மேலங்கிகளை (சேட்) கழ ற்றி விட்டு திரிவது எல் லோருக்கும் தெரிந்ததே. அதேபோன்று பெண்களும் மேலங்கிகளை கழற்றி விட்டு உலாவும் உரிமை தமக்கு இருக்க வேண்டும் என்று கோரியே இந்த ஊர்வலத்தை நடாத் தியுள்ளனர்.

இதோ அந்த புதிரை நீங்களும் பகிந்து கொள் ளுங்கள். கனடா அன்ராறியோ என்னும் இடத்தில் குவின் ஜக்கொப் என்னும் 19 வயதுடைய பெண் சென்ற வருடம் ஓர் நாள் வெப்ப காலத்தில் அழகிய இடத்தில் தனது மேலங்கிகளை கழற்றி உலாவந்த போது இந்த பிரச்சினை ஏற்பட்டது. ஒரு மாணவியான அந்தப் பெண் தான் ஹூல்ப். இந்த இட த்தில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண் டிருந்த ஒரு மாணவி கடந்த வருடம் ஒரு நகரப் புறத்தில் நட ந்து கொண்டிருந்த சமயம் வெட்கை தாங்க முடியாமல் தனது மேலங்கிகளைக் கழற்றி எறிந்து விட்டு நடந்து கொண் டிருந்த போது அந்த மாணவி உடனே பொலி சாரினால் கைது செய்யப் பட்டு பின் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். கனடா வின் குற்றவியல் சட்ட த்தின் கீழ் நடத்தை கெட் ட தோற்றத்தில் தோன்றினார் என்ற குற்றத்தின் பெயரில்

இந்த நினைவை ஒட்டி பார்குகளிலும் மற்றும் மக்க ள் கூடும் இடங்களிலும் பல நூற்றுக் கணக்கான பெண கள் தங்கள் மேல் உடை களைக் கழற்றி விட்டு ஊர்வலமாகத் திரண்டனர்.

**சென்ற இதழில் இடம் பெற்ற இக்கட்டுரை அச்சுப் பதிப்பு தெளிவின்மையால் அனேகரின் வேண்டுகோளின் பேரில் மறுபிரசுரம் செய்கிறோம்**

ஜக்கொப் தனது வழக்கு விசாரணையின் போது பெண்கள் ஆண்களுக்கு நிகரான முறையில் உரிமை களை அனுபவிக்கலாம் என்று சட்டத்தில் கூற ப்பட்டுள்ளது. பெண்களின் மார்பகங்கள் எந்த வித த்திலும் ஆண்களின் உரோமமுள்ள மார்பினை விட வித்தியாசப்பட்டது அல்ல என்று கூறுகின்றனர் கைக்காக கைது செய் துள்ளனர். ஆண்கள் சேட் இல்லாமல் வீதிகளில் திரி வது சட்டத்திற்குப் புறம்பான செயல் அல்ல என்று சட்டம் கூறுமானால் பெண்கள்இயற்கையின் அமைப்பில் பாலூட்டும் இயல்பினால் பருத்த மார்பகங்களைக் கொண்ட பெண்கள் ஏன் தாம் விரும்பும் சமயத்தில் மேலங்கியைக் கழற்றி

www.tamilarangam.net




Special Offer! Special Offer!!

**Letter Heads 500** ~~£55.00~~ **£30.00**

**Business Cards 500** ~~£45.00~~ **£25.00**

*For all other printings*

40% off

Open Mon - Sun
10.00 - 12.30 & 1.30 - 7.30

# NewTec Printers

Unit 2, Glenville Mews, Kimber Road, London SW18 4NL.
☎ 081 871 2734. Fax: 081 877 3837

Tamil - English
General & Colour Printing
Design - Typesetting - Artwork
Printing - Publishing - Finishing

சகலவிதமான தமிழ், ஆங்கில அச்சு வேலைகளையும்
விரும்பிய விதத்தில் சிறந்த முறையில் செய்துகொள்ள
நியூ ரெக் அச்சகம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Your Occasions On Video
Wedding Ceremony, Birthay Parties
And All Other Special Occasions
Be Filmed On Video ??

GR TELEMOVE
Paris ************* London

Special Features:-
* Filters & Lenses
* Quality Audio Dubbing
* Multi Camera Recording
* Video Vision Mixing
* Special Effects

THE GUILD OF PROFESSIONAL VIDEOGRAPHERS
PROFESSIONALISM AND CREATIVITY

GR TELEMOVIE
The Name For Quality

London: Shan & Brothers ✆ 081-767 1899
Paris: Ganesh & Brothers ✆ 40 59 94 74

## கன்னிவெடியா?. . . . .

1ம் பக்கத்தொடர்ச்சி

கிடைத்த தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. அண்மையில் எமது பத்திரிகையின் விசேட நிருபர் ஈ.பி.டி.பி. பிரமுகர் ஒருவரை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்தபோது வெகு விரைவில் இராணுவத் தலைகள் போவதற்குரிய ஒழுங்குகள் நடப்பதாகத் மறைமுகமாகத் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் யாழ். . . . .

1ம் பக்கத்தொடர்ச்சி

பிந்திக் கிடைத்த செய்திகளின் பிரகாரம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத இடங்களில் அரசு ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் படியும் பொது இடங்களில் தஞ்சம் தேடிக் கொள்ளும் படியும் இராணுவம் மக்களுக்கு பணித்துள்ளது.

இன்று (21-8-92) கிடைத்த தகவல்களின் படி யாழ் குடாநாட்டின் மீது பலத்த ஆகாயத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. தீவுப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட செல் தாக்குதல்கள் பல இடங்களில் விழுந்து வெடித்ததில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஒட்டுமடம் என்ற பகுதியில் போடப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு பெண்மணி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

# காட்டிலே மீன்

## சிறுவர் பகுதி — ஜீவன்

கந்தன் என்பவன் ஓர் விவசாயி அவன் மரங்கள் நிறைந்த காட்டின் அருகில் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் அதிகாலையில் தோட்டத்திற்குச் சென்று விட்டு மாலையில் வீடு திரும்புவான். ஒரு நாள் அவன் தோட்டத்திர்கு சென்ற சிறிது நேரத்திலேயே வேர்த்து விறுவிறுத்து திரும்பி வந்தான்.

'கமலா கமலா நாம் பணக்காரர் ஆகி விட்டோம். எனக்கு இன்று பொன் புதையல் கிடைத்தது. இதை வைத்து நாம் வாழ் நாள் பூ ராக சந்தோசமாக வாழலாம்' என ஒடி. வந்தபடி கூறினான். இதைக்கேட்ட கமலா அடுப்பில் பால் பொங்குவதையும் கவனியாது ஒடி வந்து கந்தனைக் கட்டி அணைத்தாள்.

சிறிது நேரத்தின் பின்னர் கந்தன் சிந்தனையில் ஆழ்ந்தான். நாமோ ஏழைகள் இன்று திடீரென்ப் பணக்காரர்களாக மாறிவிட்டால் எம் நாட்டு மன்னனும் மக்களும் நிச்சயமாக எங்கள் மீது சந்தேகப் படுவார்கள். ஆதலால் இதன இப்போதைக்கு உபயோகப்படுத்துவதில்லை என முடிவெடுத்தான். பின்னர் தன் மனைவியின் பழக்க வழக்கங்களை நினைத்துப் பார்த்தான். அவளோ ஒரு வெடி வாய். எனக்குத் தங்கப் புதையல் கிடைத்த ரகசியத்தை இவ்வூர் முழுக்க சொல்லிவிடுவாள். நம நாட்டு அரசன் இதை கேள்வியுற்றால் புதையலை என்னிடம் இருந்து பறித்து விடுவான். ஆகவே இதிலிருது தந்திரமாக தப்பிக்க வேண்டும் என மீண்டும் சிந்தனையில் மூழ்கினான். சூரியன் மேற்கே மறைந்து நட்சத்திரங்களும் சந்திரனும் வானத்தில் ஒளி வீச ஆரம்பித்தன. கந்தன் கமலாவை அழைத்து நாம் இந்தப் புதையலை வீட்டினுள் வைத்திருந்தால் திருடர்கள் யாராவது திருடிவிடுவார்கள் ஆதலால் அதை இப்போதே நமது வீட்டின் முன் புதைப்போம் எனக் கூறினான். உடனே இருவரும் சேர்ந்து அதை அவ்விடத்தில் புதைத்தனர். புதையலைப் புதைத்ததும் கந்தன் தனது தந்திரப் புத்தியை உபயோகிக்க ஆரம்பித்தான். கமலா நாளை நீ அதிகாலையில் எழ வேண்டும் . அதனால் இப்பவே போய் தூங்கு. என்றான் கந்தன். எதற்காக நான் அதிகாலையில் எழவேண்டும் என்றாள் கமலா. நாளை நாம் இருவரும் காட்டிற்கு சென்று மீன் பொறுக்கி வரலாம் என்று கந்தன் கூறினான். காட்டிலே மீனா? வியப்புடன் கேட்டாள் கமலா. ' ஆமாம் காட்டில் தான் இந்த வருடம் மீன் பொறுக்குவதற்கு சிறப்பானது' என்றான் கந்தன். பின்னர் கந்தன் தான் வெளியில் போய் வருகிறேன் என கையில் கூடையுடன் தெருக்கடைக்குச் சென்று கூடை நிறைய பெரிய மீன்களும் பலவகைத் தின் பண்டங்களையும் வெவ்வேறு கடைகளில் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான் . அப்போது அங்கே கமலா நல்ல உறக்கத்தில் இருந்தாள். கந்தன் கொண்டு வந்ததை ஓரிடத்தில் வைத்து விட்டு புதைத்த தங்கத்தை எடுத்து வேறு ஒரு இடத்தில் புதைத்தான். பின்னர் மீன்களையும் தின் பண்டங்களையும் உதவிக்கு தனது வில்லினையும் எடுத்துக் கொண்டு காட்டுச் சென்றான். காட்டிற்குள் நுழைந்த ஒரு சில நிமிடங்களின் பின்னர் மீன்களை ஆங்காங்கே பாதைகளின் ஓரங்களில் எறிந்து கொண்டு சென்றான். மீன்களை எல்லாம் எறிந்து முடித்த பின் தின் பண்டங்களை



வண்ண வண்ண கூடைகளில் வைத்து தேக்க மரம் ஒன்றில் ஒவ்வொரு கிளைகளிலும் வைத்தான். எல்லாம் முடித்து வீடு திரும்பும் போது ஒரு முயலைக் கண்டான் . உடனே அதைத் தன் வில்லால் கொன்று அதையும் ஓரிடத்தில் போட்டு விட்டு வீடு, வந்து சேர்ந்தான். மறு நாள் காலை கமலா ஏழுந்து கந்தனையும் எழுப்பி இன்று காட்டிற்குப் போகிறோம் என்று கூறினாள்.

'நான் மறந்தே போய்விட்டேன்' என்ற படியே கந்தன் அரைத் தூக்கத்துடன் எழுந்தான். இருவரும் வெகு விரைவாக காட்டிற்கு நடந்து சென்றனர். போகும் வழியில் கமலா 'நீ ஒரு முட்டாள். காட்டிலே மீனா உன் பேச்சை நம்பி நானும் உன் கூட வருகிறேன்' என்று கூறிய படி நடந்தாள்.

காட்டில் நுழைந்த சிறிது நேரத்தின் பின்னர். கமலாவினது விழிகள் ஒரு மீனைக் கண்டன.

'ஆமாம் நான் கண்டுவிட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. அது மீன் தானா? இல்லை வெறும் கனவா? ' என கந்தனிடம் கேட்டாள். கந்தனும் ' அது மீன் தான் எடுத்துக் கூடையில் போடு ' என்றான். அப்படியாக இருவரும் நடந்து நடந்து மீன்களைப் பொறுக்கி கூடையை நிரப்பினர். நெடுநேரமாக கீழ் நிலத்தையே பார்த்து களைத்த கமலா சற்று நிமிர்ந்து களைப்பாற நினைத்த போது அந்த தேக்க மரத்தின் ஒவ்வொரு கிளைகளிலும் இருந்த தின் பண்ட கூடைகளைக் கண்டாள். உடனே இங்கு பாருங்கள் அப்பா. என்ன இது அதிசயம். தேக்க மரத்தில் இனிப் பு நிறைந்த கூடை ' எனக் கூறினாள்.

'ஆமாம் நான் உனக்கு அப்பவே சொன்னேன். இது அதிசயம். அற்புதமான காடு என்று. நீ நம்பவே இல்லை. இப்போதாவது நம்பிக் கொள்' என்றான் கந்தன்.

இருவரும் எல்லா வற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தனர். அப்போது கமலாவின் கால்களில் ஏதோ தட்டுப் படுவதை அவள் உணர்ந்தாள். குனிந்து பார்த் போது முயல் ஒன்று அரை உயிரில் கிடப்பதைப் பார்த்து அதையும் வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். இருவரும் அன்று மகிழ்ச்சியுடன் எல்லாவற்றையும் சமைத்துச் சாப்பிட்டனர். கந்தனுக்கோ கமலாவை ஏமாற்றி விட்டேன் என்று ஒரே சிரிப்பு. கமலாவிற்கோ நல்ல உணவு வகைகள் கிடைத்தன என்று ஒரு திருப்தி. ஆகவே இருவரும் அன்று சந்தோசமாகப் பொழுதைக் கழித்தனர். மறுநாள் கந்தன் எழுந்து கமலாவை ' இன்றும் நாம் போகலாம் என்று கேட்டான். கமலாவோ பேராசை பெரு நட்டம். எமக்கு காடு அளித்த ஒருநாள் விருந் தே போதும் . நீங்கள் தோட்டத்திற்குப் போங்கள். ' எனக் கமலா கூறினாள். அதைக் கேட்ட கந்தன் தப்பினோம் பிழைத்தோம் என தோட்டத் திற்குச் சென்று விட்டான். ஒரு சில கிழமைகளின் பின்னர் கமலா தன் நண்பி ஒருத்திக்கு தமக்கு தங்கப் புதையல் கிடைத்த விடயத்தையும் புதைத்த விடயத்தையும் அவளுக்குக் கூறினாள். இதைக் கேட்ட அவள் நடந்ததை தனது நண்பிக்குக் கூறினாள். இவ்வாறே இந்தக் கதை ஊர் முழுக்க பரவிற்று. இறுதியில் இது நாட்டு அரசன் காதில் எட்டிற்று. நாட்டு அரசன் கோபத்துடன்

## ராகவன்

மனைவியையும் கணவனையும் அழைத்து வரும படி உத்தரவிட்டான்.

அதன் படியே சேவகர்கள் சென்று இருவரையும் அழைத்து வந்தனர். வாசலில் அவர்கள் வருவதைக் கண்டதுமே அரசன் மிகுந்த - கோபத்துடன்

SAMRAS
VIDEO & SPICES
We Specialise in Old & New
Hindi * Malayalam * Tamil
* Audio Cassettes *
* Compact Discs * Records * Films *
251A Haydons Road
London SW19 8TX

## திசை மாறிய. . .

4ம் பக்கத்தொடர்ச்சி

மாற்றினார். புதுப் புது அர்த்தங்கள் அதனை நிரூபித்தன .பாரதிராஜா மாறினார் நாடோடித் தென்றல் அதை வெளிக்காட்டியது. மேல் சட்டை இல்லாமல் கிராமத்து பாணியில் தோன்றும் ஒரு கதாநாயகியை அறிமுகம் செய்து வைத்த பாரதிராஜா அவளக் கங்கையில் குளிக்க விட்டு இன்றைய ரசிகர்களை திருப்திப் படுத்த அரைகுறை உருவத்தை ஒளிப்பதிவினுள் அடக்கி விட்டு மீசையில் மண் படா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று வழமைக்கு மாறாக காலை நான்கு மணிக்கே வித்யா கண் விழித்து விட்டாள். யன்னல்களைத் திறந்த போது அனுமதியின்றி உட்பிரவேசிக்கும் இளம் தென்றல் ஜில்லென உடலைச் சிலிர்க்க வைக்க காலைப் பொழுதின் இயற்கை அழகை இரசிக்கலானாள்.

இன்று தீபாவழி நன்நாள். தீபங்கள் ஏற்றி பட்டாசு கொழுத்திப் பள்ளிசிறார்கள். கட்டிளம் காளைகள் பருவப் பெண்கள், என் பாட்டன் பாட்டியர் கூட பட்டாடை கட்டி கொண்டாடும் இத் தீபாவளித் திருநாள் இன்றா? என எண்ணிக் கொள்கின்றாள் வித்தியா. வெளியில் வானுயர்ந்த பனை மரங்களுக்கிடையில் ஒளிந்து நின்று வளைந்து நெளிந்து உம்மை முந்தி விடுவோம் எனும் நோக்கத்துடன் வளர முயற்சி செய்து கொண்டிருக்கும் தென்னை மரங்கள் சிலவற்றை பார்த்த வித்யா மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். காரணம் வளைந்து நிற்கும் தென்னை மரங்களுக்குத் தான் ஏன் இந்த ஆசை. இது தான் அவள் சிரிப்பதற்குக் காரணம்.

இப்போது பட்டாசுகள், வான வெடிகள், அனைத்தும் வடபகுதிக்கு தடை செய்யப்பட்டு விட்டன. முன்பெல்லாம் தீபாவழி நாளில் மரதன் ஓட்டம் சைக்கிள் ஓட்டப்போட்டி இவற்றை விட முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் முன் கம்பீரத்துடன் காட்சிதரும் விளையாட்டு மைதானம் விழாக்கோலம் பூண்டு

விடும். காரணம் பலதரப்பட்ட விளையாட்டுக்கள் அங்கு

நடைபெறும். ஆம் இவையெல்லாம் நடந்து நான்கு வருடங்களிற்கு மேலாகின்றன. இப்போதெல்லாம் மக்கள் கூட்டம் கண்டால் வானத்தின் காவல் பறவை பொம்பர் , கெலிகொப்டர் இவைதான் எத்தனை வகை. உடனேயே செயல்படத்தொடங்கி விடும். மறுநாள் அத்தனை மக்களும் பயங்கரவாதிகள் என மிகவும் சிறந்த பெயர் சூட்டப்பட்ட பிணங்களாவர் .

இவை அனைத்தையும் எண்ணிய வித்யாவால் மூன்று வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற தீபாவழித் தினத்தை நினைவுக்குக் கொண்டுவராமல் இருக்க முடியவில்லை. ஆம் அதுதான் எவ்வளவு கொடூரமான நாள். வித்யாவின் வாழ்க்கையில் ஆழமாக பதியப்பட்ட நாள்.

முல்லைத் தீவு மாவட்டத்தில் அமைந்த வற்றாப்பளை எனும் கிராமத்தில் ஓர் நடுத்தரமான குடும்பத்தில் பிறந்தவள் தான் வித்யா. அண்ணன் கேசவன், தங்கை மதுரா,

ஐந்து நபர்களைக் கொண்டதுதான் வித்யாவின் குடும்பம்.

பத்தாம் வகுப்பு பரீட்சை எழுதிவிட்டு பெறு பேறுக்காக காத்திருந்தாள் வித்யா. கேசவன் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். கேசவனின் ஆருயிர் நண்பன் மாதவன் வற்றாப்பளையிலிருந்து இருபது மைல்களுக்கப்பால் இருக்கும் நெடுங்கேணி என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். முள்ளியவளையில் உறவினர் வீட்டிலிருந்து கல்வி கற்ற மாதவன் கல்வியில் மிகவும் கவனம் கொண்டவன். மாதவன் அண்ணனுடன் அடிக்கடி வீட்டுக்கு வருவதை வித்யா கண்டிருக்கிறாள். அதிகம் பழகியிருக்கவில்லை. காரணம் அவன் அங்கு அதிக நேரம் தங்கியிருப் பதில்லை. அப்பாவின் உத்தரவுடன் இரண்டு நண்பர்களும் தங்கள் கல்வியை பகிர்ந்து கொள்ள அதிக வசதி கிடைக்கும் எனும் நோக்குடன் மாதவனை கேசவன் தன்னுடன் தங்கவைத்துக் கொண்டான்.

காலம் ஒருவருடத்தைக் கடந்து விட்டது. இருவரும் உயர்தரப் பரீட்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாளை புவியியல் பகுதி மூன்றுடன் பரீட்சை முடிவடைந்து விடும். கேசவனின் மனம் சந்தோசமான நிலையிலிருந்தது. காரணம் பன்னிரண்டு வருடமாகத் தொடர்ந்து வந்த கல்வியை ஒருவாறு முடித்து விட்டோம் என்பதே. சிலமாதம் ஓய்வெடுக்கலாம் என்பதை விட புரட்டாதி மாதத்தில் நந்திக் கடலுக்குப் போய் நண்டு பிடித்து நண்பர்களுடன் உல்லாசமாகப் பொழுது கழிப்பதற்கு அப்பா தடை போடமாட்டார் . இதை நினைக்கும் போது தான் அவன் ஆனந்தமடைந்தான். இதற்கு ஏற்றாற் போல் ஆவணி மாதத்தில் பரீட்சை முடிந்தது.

நாளை ஒருபொழுது. மறுநாள் மாதவன் வீட்டிற்குப் போய்விடுவுான். அந்த நாளை மறக்க முயன்ற மாதவனால் அது முடியவில்லை. என்ன கற்பனையில் விடை காணுறியள் போல கிடக்கு வித்யாவின் குரல் மாதவனைத் திடுக்கிட வைத்தது. கையில் தேனீருடன் வந்த வித்யா அவனருகில் வந்தாள். மாதவனால் வீத்தியாவுடன் . வழமையாகக் கதைப்பது போல் கதைக்க முடியவில்லை. அமைதியாகத் தேனீரை வாங்கி மேசையில் வைத்தான். வித்யா அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்றாள். தேனீரைப் பருகிய மாதவன் வழமையை விட இன்று தேனீர் மிகவும் சுவையாக இருக்கின்றது

என்று அமைதியைக் கலை

# வித்தியா முடிவெடுத்துவிட்டாள்




என்று தாழ்ந்த குரலில் கூறிய வித்யாவை ஏக்கத்துடன் பார்க்கிறான் மாதவன். அவள் கண்கள் இரண்டும் மலையிலிருந்து வழிந்தோடும் அருவி போல நீரை வடித்தன. என்ன வித்யா சின்னப் பிள்ளை போல எனக் கூறியபடி கண்ணீரைத் துடைக்க முயன்ற மாதவனின் கைகளைத் தனது கையால் விலக்கி விட்டு தனது இரு கரங்களாலும் கண்ணீரைத் துடைத்தபடி சிட்டாக ஒடிமறைந்தாள் வித்யா.

மாதவன் ஏறக்குறைய ஒரு வருடம் கேசவன் வீட்டில் இருந்திருப்பான்.




அவனது குணநலங்களையும் படிப்பில் அவனது அக்கறையையும் கண்டு கொண்ட வித்யாவின் பெற்றோர் அவனை வெகுவாகப் பாராட்டினார்கள். கேசவன் ஒரு சிறந்த நண்பனைத் தெரிந்தெடுத்திருக்கிறான் என்று அப்பா பெருமைப்பட்டுக் கொள்வார். வித்யாவும் மதுராவும் மாதவனுடன் நெருங்கிப் பழகினாலும் மதுராவைப் போல வித்யா நெருங்கிப் பழகுவதில்லை இந்த



ஒரு வருட காலத்தில் தான் எத்தனை மறக்க முடியாத இன்பமான நாட்கள். மாதவனுக்கு விருப்ப மான உணவுகளை அம்மா மூலமும் அண்ணன் மூலமும் கேட்டறிந்து அதைத் தயாரித்து பரிமாறி இன்பம் கண்டாள் வித்யா. வித்யாவுக்கு விருப்பமானவற்றை அவர்கள் மூலம் கேட்டறிந்து அதை எல்லாம் வாங்கிக் கொடுத்து அவள் சந்தோசத்தை தனதாக்கி மகிழ்ந்தான் மாதவன். இவ்வாறே ஒருவரையொருவர் உள்ளத்தால் நேசிக்க ஆரம்பித்தனர். இது தான் எவ்வளவு ஆழமானது. இதற்கு உள்ள வலிமை எவ்வளவு ஆழமானது. ஆம் இதைத்தான் தூய்மைக் காதல் என்பார்களோ? மாதவன் வித்யா இருவரும் காதல் என்ற தள்ளப்பட்டு ஒருவரையொருவர் ஆழமாக விரும்ப ஆரம்பித்தனர்.

வித்யாவின் பெற்றோரின் விருப்பத்தின் பொருட்டு பரீட்சை முடிந்ததும் ஒரு வாரம் வித்யாவின் வீட்டில் நிற்பதாய் முடிவெடுத்தான். இந்த ஒரு வாரத்துள் தான் வித்யாவைத் தான் மனதார விரும்புவதாயும் அவளையே தான் திருமணம் செய்வேன் என உறுதி மொழி கூறியதுடன் வித்யாவின் சம்மதத்திற்காக

மாதவன் காத்திருந்தான். மெளனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பது போல வித்யா தனது சம்மதத்தை தெரிவித்தாள். அவள் மனமோ இறக்கை கட்டி வானத்தில் சிறகடித்து உல்லாசமாய் பறந்து கொண்டிருந்தது. அவன் அவளது அண்ணனிடமும் சம்மதத்தைப் பெற்று

விட்டதைக் கூறினான். எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

எல்லோரும் எதிர்பார்த்தது போலவே மாதவன் சிறந்த பெறுபேற்றபொ பெற்றுக் கொண்டான். கேசவனுக்கு புள்ளிகள் போதாமையால் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை. மாதவனுக்கு அனுமதி கிடைத்தது. பல்கலைக் கழகம் செல்வதற்கு முதல் நாள் மாதவன் எல்லோருடன் வித்யாவின் வீட்டிற்கு வந்திருந்தான். பாடசாலையால் வீடு திரும்பிய வித்யாவ கண்களையே நம்பமுடியவில்லை. சந்தோசத்துடன் உணவருந்திய அவர்கள் அன்றே வீடு திரும்ப உத்தேசித்தனர். உடன் மாதவன் போவதைக் கேட்ட வித்யாவுக்கு அழுகையே வந்து விடும் போல் இருந்தது. தேனீர் பரிமாறிய வித்யாவுடன் கதைப்பது




போல் பாசாங்கு செய்து உடன் வீடு திரும்புவதற்கான காரணத்தை கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். வைகாசி மாதத்தில் அங்கு நடைபெறும் அம்மன் பொங்கலிற்கு தான் நிச்சயம்

வருவதாகக் கூறி விடைபெற்ற மாதவன் இறுதியாக வித்யாவின் முகத்தை நோக்கினான். கேசவன் இருவரையும் பார்த்து மாதவனின் முதுகில் தட்டிச் சிரித்தான். தனக்கு வேறு வேலை இருப்பதாகச் சாட்டுக் கூறிய வித்யா ஓடி மறைந்து விட்டாள்.

வளாகப் பெடியங்களைக் கூட்டிக் கொண்டு மாதவன் வருவதாகக் கடிதம் போட்டிருந்தான். அதனால் வித்யாவின் அப்பா வீட்டுப் புறச் சூழலைச் சுத்தம் செய்யத் தொடங்கினார்.

வித்தியா ஜன்னல்களைத்

பொங்கல்த் திருநாள். அதைவிட மாதவன் வரும் செய்தி அவளுக்கு அளவிலா ஆனந்தத்தைக் கொடுத்தது. நீண்ட நாட்களாக அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. கடிதப் பரி மாற்றம் தான்.

வித்யா இப்போது உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். பரீட்சைக்கு மூன்று வாரங்கள் இருந்தன. வெளியே யாரோ அழைப்பது கேட்டு வெளியே ஓடி வந்தாள் வித்யா. கதவில் அவளது மாமா பரஞ்சோதி.

கலியாண விடயமாக இன்று பேச வருவேன் என்று மாமா கூறியது அவளுக்கு நினைவுக்கு வந்தது. அவர் அப்பாவுடன் என்ன கதைக்கிறார் என்பதைக் கேட்பதற்காக கதவைத் திறந்து விட்டுக் கொண்டாள்.

இருவரும் சம்பந்த விடயத்திற்கு வந்தனர். பரஞ்சோதி மாமா நேரடியாகவே தான் வந்த விடயத்தை முன்வைத்தார். நானும் தம்பி இராகவனை இனிமேல் வைச்சிருக்கேலாது. கனக்க இடத்திலை கேட்டு வந்திருக்கு. நானும் காரணம் சொல்லிக் களைச்சிட்டன். பரஞ்சோதி புளுகினார். ஏன் மச்சான் நான் எந்தநாள் பாத்தாலும் அவன் இயக்கப் பெடியளோடதான் திரியிறான். இவங்களுக்கெல்லாம் கலியாணம் செய்து வைச்சாத் தான் அடங்குவாங்கள் என்றார் வித்யாவின் அப்பா சுந்தரலிங்கம்.

நேற்று வந்த சம்பந்தமும் ஜந்து லட்சம் காசு, வீடு ,நகை என்று கேட்டு வந்தது. நான் தான் வேண்டாம் எண்டுட்டன். தங்கச்சியின் மகள் தோதாய் இருக்க வெளியிலை போக எனக்கு மனம் வருகுதில்லை. வித்யாவுக்கும் ராகவனுக்கும் ஆவணிக்குள்ளை நாள் பார்த்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீங்கள் விரும்பும் பழைய திரைப்படங்களையும்,

புதிய திரைப்படங்களை உடனுக்குடன்

சிறந்த பிரதியில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள



## Tooting இல் ஒரே ஸ்தாபனம்

# T.K Video

081- 767 1582

FAX : 081 672 5715

**First Floor**
**118, Tooting High Street**
**Tooting, London SW17.**



Open 7 Days a Week!!

Mon - Fri 1.00pm to 11.00pm
Sat - Sun 10.00am - 10.00pm

**TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK TK**

உங்களுக்குத்தேவையான சகலவிதமான இலங்கை,இந்திய உணவுப்பொருட்கள்

வாடகைக்கு தமிழ் திரைப்படங்கள்,
புதிய,பழைய திரைப்படப் பாடல்கள்
ஓடியோ, வீடியோ, சீடீக்கள்
இன்னும் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்

மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# T.K Enterprises

**081- 543 6932**

110, Merton High Street
Wimbeldon
London SW19

Open 7 days 10.00 am to 10.00pm

www.tamilarangam.net





*இக்கட்டுரைத் தொடர் தமிழீழத்திலிருந்து வெளியாகும் ஈழநாதம் எனும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதாகும். இதனை ஈழபூமி வாசகர்களுக்காக நன்றியுடன் பிரசுரிக்கிறோம்*

# பிரேமதாசா

ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பின் பிரகாரம் பிரேமதாஸ சிங்கள ஆயுதப் படையினரின் பிரதம தளகர்த்தா ஆவார். எனினும் படையினரை அவர் முழுமையாக நம்பிவிடவில்லை. அவர் இயல்பாகவே ஒரு சந்தேக பிராணி. நிலத்தைப் பார்த்து நிதானமாக நடப்பார். விலங்குகளும் விஷ ஜந்துகளும் வாழும் அரசியல் காட்டினுள் அவதானமாக அடியெடுத்து வைக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். நீண்ட காலமாகவே மண்டிய ஆளும் வர்க்கத்தின் கைப்பொம்மையாக இராணுவம் செயற்பட்டு வந்திருக்கிறது. வெளிநாட்டு உள்நாட்டு ஊடுருவல்களின் களமாகத் திகழ் ந்த இராணுவ அமைப்பிலிருந்து ஆபத்துக்கள் எழலாம் என பிரேமதாஸ அஞ்சினார். தனது அரசியல் எதிரிகளான லலித், காமினி போன்றோரின் ஊடுருவல் இராணுவத்திற்குள் இருந்ததை இவர் அறிவார். சுதந்திரக் கட்சியின் ஆதிக்கமும் இராணுவத்தின் அடிமட்டத்தில் இருந்தது. விஜயவிராவின் ஆட்களும் முகம் தெரியாத மனிதர்களாகஇயங்கி வந்தனர் அத்துடன் இந்திய உளவுப் படையான றோவினது அரூப கரமும் இராணுவத்திற்குள் ஊடுருவி இருந்தது.

ஆரம்ப காலத்தில் ஜெனரல் ஆட்டிக்கலையும் ரஞ்சன் விஜேரத்னாவும் பிரேமதாஸவின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளாக இராணுவத்தின் கடிவாளத்தை கெட்டியாகப் பிடித்திருந்தனர். அவர்களுக்குப் பின்னர் ஜெனரல் ரணத்துங்கவிடமும் ஹமில்டன் வனசிங்கவிடமும் இந்தப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. ஜெனரல் ரணதுங்கா பிரேமதாஸவின் மனைவியின் நெருங்கிய உறவினர். ஹமில்டன் பிரேமதாஸவின் விடுவாசி. இவ ர்கள் - இருவர் மூலமும் இராணுவ இயந்திரத்தை இயக்கி வந்த பிரேமதாஸ தனது சொந்தப் பாதுகாப்பு போன்ற அந்தரங்க விவகாரங்களில் இராணுவத்தை நெருங்க விடுவதில்லை. ஜனாதிபதி பதவியில் ஏறிய காலத்திலிருந்து இன்றுவரை விசேட பொலிஸ் அதிரடிப் படையினரே பிரேமதாஸவின் மெய்ப்பாதுகாவலர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

லலித், காமினி கோஸ்டியினர் இந்திய உளவுப் படையுடனும் இராணுவ அதிகாரிகள் சிலருடனும் சேர்ந்து தனக்கு எதிராக சதி செய்து வந்ததை பிரேமதாஸ நீண்ட காலத்திற்கு முன்பே மோப்பம் பிடித்தார். இதனால் காமினியை பதவியில் இருந்து ஒதுக்கி வைத்த பிரேமதாஸ லலித் மீது விழிப்பாக இருந்தார். ஆனால் சதிகாரர்கள் நல்ல ஒரு சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தனர்.

கொழும்பு பேச்சுவார்த்தை காலத்தில் பிரேமதாஸ புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற தகவல் லலித்துக்கு எட்டியது. இந்த விவகாரத்தை பூதாகரமாக்கி பிரேமதாஸவுக்கு குழி பறித்து விடலாமென லலித் கோஸ்டி திட்டம் தீட்டியது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் வாசஸ் தலத்தில் சதி ஆலோசனைகள் நடைபெற்றன. தேச துரோக குற்றப் பத்திரிகை சபாநாயகரிடம் தாக்கல் செய்யப்பட்டது. கொழும்பில் ஒரு அரசியல் சூறாவளி எழுந்து பிரேமதாஸவின் ஆட்சிப் படகை ஆட்டம் காணச் செய்தது. புற்றிலிருந்த பாம்புகள் எல்லாம் ஒரே நேரத்தில் படமெடுத்து ஆடியதால் பிரேமதாஸ அதிர்ந்து போனார். என்றாலும் மிகவும் சாணக்கியத்துடன் அவர் காய்களை நகர்த்தினார். புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதை பிரேமதாஸ மறுக்கவில்லை. தமிழ் தேசிய இராணுவத்துடன் சமர் புரிவதற்கு புலிகளுடன் ஆயுதங்களைப் பகிர்ந்து கொண்டதாக அறிக்கை வெளியிட்டார். இராணுவத் தலைமையும் பிரேமதாஸவின் கூற்றை மறுக்கவில்லை. ஏதோ தமிழனைத் தமிழன் அழிக்க ஆயுதங்கள் கை மாறப் பட்டதாக சிங்கள வெகுசனம் திருப்தி அடைந்தது. அமைதிப் படையை அழிக்கவே ஆயுதம் வழங்கப்பட்டது என இந்திய தரப்பிலிருந்து எழுந்த ஆட்சேபக் குரலும் பிசுபிசுத்துப் போயிற்று.

இந்த ஆயுத விவகாரச் சர்ச்சைக்குள் தலையிட்டு குட்டையை குழப்ப புலிகள் விரும்பவில்லை. எப்பொழுது, எதற்காக, எவ்விதம், எவ்வளவு ஆயுதங்கள் பிரேமதாஸவிடம் இருந்து அள்ளப்பட்டது என்பது பற்றிப் புலிகள் எதுவுமே கூறவில்லை. பெரும்பான்மையுடன் மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள் போலும். எனினும் எல்லோரையும் மிஞ்சிய சாணக்கியர் கள் என்பதை புலிகள் நிரூபித்து விடத் தவறவில்லை.

பிரேமதாஸவின் ஆயுதங்களை கொண்டோ அல்லது சிங்கள இராணுவத்தின் உதவியுடனோ தமிழ் தேசிய இராணுவத்தை நிராயுதபாணிகள் ஆக்கவில்லை என விளக்கி புலிகளின் சர்வதேசப் பிரிவு வெளியிட்ட அறிக்கை கொழும்பில் இருட்டடிப்பு செய்யப்பட்டது.

இது இவ்வாறிருக்க, பிரேமதாஸவுக்கு சார்பாக சபாநாயகர் திடீரென குத்துக் கரணம் அடித்ததால் நம்பிக்கை இல்லாப் பிரேரணை செத்துப் போனது. அரசியல் சூறாவளியை எழுப்பியவர்கள் அந்தப் புயற் காற்றிலேயே அடித்துச் செல்லப்பட்டனர்.


தென்னிலங்கையில் அரசியல் கொந்தளிப்புத்தணிய வடகிழக்கில் யுத்தம் உக்கிரம் அடைந்தது.

சிங்கள இராணுவம் வெற்றிப்பாதையில் வீறாப்பு நடை போடுவதாக எண்ணியதால் சமாதானத்தின் கதவுகளை திறந்து விட பிரேமதாஸ விரும்பவில்லை. தொண்டமான விடுத்த சமாதான புறாவையும் சிங்கள பேரினவாதிகளுக்கு இடைநிறுத்தி வீழ்த்தியது.

நீண்ட காலப் போரினால் புலிகள் இயக்கம் பல வீனம் அடைந்கு விட்டது என்ற தப்பான மதிப்பீடு இந்திய தமிழ் நாட்டு அரசுகளின் அடக்கு முறை நடவடிக்கைகளினால் புலிகளின் பின் தளமும் கடற் பாதையும் மூடப்பட்டு விட்டது என்ற நம்பிகையையும் தமிழீழ மக்கள் மத்தியில் புலிகள் இயக்கம் ஆதரவை இழந்து விட்டது என்ற பொய்யான கணிப்பும் இராணுவவாதிகளை ஊக்கிவித்து வருகிறது.



இரண்டாம் தடவையும் ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏற வேண்டும் என்பது பிரேமதாஸவின் அந்தரங்க ஆசை. தமிழருக்கு உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் வழ்ங்கி இனப்பிரச்சனையை தீர்க்க முயற்சித்தால் சிங்கள பௌத்த பேரின வாத சக்திகளின் பகையை தேடிக்கொள்ள நேரிடும் . இதனால் அடுத்த தடவையாக ஆட்சி பீடம் ஏறும் அரிய சந்தர்ப்பங்கள் கெட்டுவிடும் .ஆகவே



பிரேமாவைக் கவிழ்க்க நினைத்த லலித்தும், காமினியும்

போரைத் தொடர்ந்து பிரச்சனையை இழுத்தடிப்பதே சாலச் சிறந்த வழி என பிரேமதாஸ எண்ணுகிறார். இரண்டரை ஆண்டுகளாக எதுவித கருத்தொற்றுமையும் இல்லாமல் இழுபட்டு வந்த அனைத்து கட்சி மாநாட்டிலிருந்து அங்கே கட்டமைப்புடைய இன்னொரு கூட்டுக் குழுவிடம் (பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம்) பிரச்சனையை ஒப்படைத்து விட்டதால் இன்னும் இரண்டொரு வருடங்களுக்கு விவகாரத்தை இழுத்தடிக்கலாம் என்பது பிரேமதாஸவின் திட்டம்.

தொண்டமானின் சமரச முயற்சிக்கு பிரேமதாஸவின் ஆசீர் வாதம் இருப்பதாக பலர் எண்ணியதுண்டு. ஆனால் உண்மையில் தொண்டமானின் தீர்வுத் திட்டமும் அவர் யாழப்பாணம் வந்து புலிகளுடன் கலந்தாலோசிக்க மேற்கொண்ட முயற்சிகளும் பிரேமதாஸவுக்கு பெரு ம் சங்கடத்தையே ஏற்படுத்தியது. புலிகளுடன் போரைத் தொடர்ந்து, புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப் படுத்தி அழிக்க வேண்டும் என்று பிரேமதாஸ கங்கணம்கட்டி நிற்க, புலிகளை தமிழர்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த தொண்டமான் முனைந்தது பிரேமதாஸவுக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. எனினும் மலையகத்தின் முடிசூடா மன்னரை தோட்டப் பாட்டாளி வர்க்த்தின் பெருந்தலைவரை நேரடியாகவே பகைத்துக் கொள்ளும் துணிவு பிரேமதாஸவுக்கு ஏற்படவில்லை.

அது மட்டுமன்றி வடகிழக்கு நிரந்தரமாக இணைந்த தமிழர் தாயகத்தை அங்கீகரிக்கும் தொண்டமானின் முற்போக்கான தீர்வுத் திட்டத்தையும் பிரேமதாஸவினால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே பௌத்த பீடத்தை முடுக்கி விட்டு தொண்டமானுக்கு எதிராக சிங்கள பேரின வாதப் பூதத்தை ஏவி விட்டதில் போதி சத்துவருக்கு நிறையப் பங்கு உண்டு. இறுதியில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தொண்டமானுக்கு வாய்ப் பூட்டு போட்டதும் அவரது திருவிளையாடல்களில் ஒன்றுதான்.

தமிழர் பிரச்சனை குறித்து பிரேமதாஸ தொடர்ச்சியாக நிகழ்த்தி வரும் கதாகலாச்சேபங்களிலிருந்து அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பதை கிரகித்தறிவது மகாசிரமம். சொற்களின் அர்த்தபரிமாணங்களிலிருந்து அவரின் செயற்பாடுகளை ஊகித்துக் கொள்ள முடியாது.

யுத்தம் அர்த்தம் அற்றது. அசட்டுத் தனமானது. யுத்தத்திலே எவருமே வெற்றி கொள்வதில்லை என்று அவர் உதிர்க்கும் தத்துவ முத்துக்களில் முரண்பாடான அர்த்தத்தைத்தான் நாம் இனங்கண்டு கொள்ளலாம். சமாதானம் ஐக்கியம் இன ஒற்றுமைப் பாடு என்று அவர் மீட்டும் ராகங்கள் கேட்டு புளித்துப் போன சினிமாப் பாட்டுப் போல சுவை இழந்து போய்விட்டன.

பிரேமதாஸவின் உண்மையான கருத்துக்களை அறிய வேண்டும் என்றால் சொற்சிலம்பாடும்வில்லுப் பாட்டுக்களைக் கேட்காது அவரது ஆவி எழுத்தாளர்களின் ஆக்கங்களை நுணுக்கமாகப் பார்க்க வேண்டும்.டெய்லி நியூஸ், ஒப்சேவர் பத்திரிகை ஆசி

**லலித் காமினி கோஸ்டியினர் இந்திய உளவுப்படையுடனும் இராணுவ அதிகாரிகள் சிலருடனும் சேர்ந்து தனக்கு எதிராக சதி செய்து வந்ததை பிரேமதாசா முன் கூட்டியே மோப்பம் பிடித்திருந்தார்**

ரியர்கள் ஜோசன் பெரேரா தயான் ஜெயதிலகா போன்றோரின் எழுத்துக்களிலிருந்து பிரேமதாஸவின் எண்ண ஓட்டத்தை இனம் கண்டு கொள்ளலாம். இனப் பிரச்சனை குறித்து இவர்கள் என்ன சொல்கிறார்கள்? பிரேமதாஸவின் அந்தரங்க ஆவி என்ன சொல்கிறது.

யுத்தத்தினால் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது . யுத்தத்தினால் நாட்டின் செல்வம் நாசமாகிப் போகிறது. ஆனால் யுத்தம் அவசியம். புலிகளுக்கு எதிரான யுத்தம் தவிர்க்க முடியாதது. ஏனென்றால் பாசிசப் புலிகளின் பயங்கர வாதத்திலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும். தாயகத்தை விடுவிக்க வேண்டும். புலிகளை ஒளித்துக் கட்டும் யுத்தத்தை தொடர்ந்து நடத்தும் அதே வேளை இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் வழி வகைகள் ஆராயப்பட வேண்டும். சனநாயகச் சக்திகளாக ஒற்றையாட்சியை ஏற்று அரசாங்கத்தை அரவணைத்து நிற்கும் தமிழ் குழுக்களுடன் கலந்தாலோசித்து ஒரு தீர்வுத் திட்டத்தை வகுக்க வேண்டும். நாட்டின் ஜனநாயகம் தழைத்தோங்க இன ஐக்கியம் வளர இதுவே சிறந்த வழி.

பிரேமதாஸவின் குருட்டுத் தனமான அணுகுமுறை இதிலிருந்து தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. ராணுவ அடக்குமுறையின்மூலம் புலிகளை அழித்து தமிழர்களைப் பாதுகாத்து எட்டப்பர் கோஸ்டிகளுக்கு ஆட்சி அதிகாரம் கொடுத்து தமிழ் பிரச்சனையை தீர்த்து விட இந்திய அரசு கையாண்ட அதே அணுகுமுறையைத் தான் பிரேமதாஸவும் கடைப்பிடிப்பது போல தெரிகிறது.

அமைதி என்று, பாதுகாப்பு என்று ஐக்கியம் என்று அன்புக் கரங்களை நீட் டும் ஆக்கிரமிப்பாளர்கள் பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். பிரேமதாஸவின் முகமூடி நடனங்கள் தமிழீழத்தில் அரங்கேறப் போவதில்லை

(முற்றும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



இரவு படுக்கையில் இருந்தபடி உறக்கம் வராமல் அந்தச் சம்பவத்தைப் பற்றியே அவர்கள் பிரஸ்தாபித்துக் கொண்ஒடிருந்தார்கள். அருளின் கபடத் தனம் அம்பலமானதில் சிலருக்குத் திருப்தி வேறு.

மறு நாள் காலை ஐந்து மணிக்கு அருளை மாத்திரம் முகாமுக்குள் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

தப்பியோடிய இருவரும் ஒரு பண்ணையார் வீட்டில் ஒளிந்திருந்தார்களாம். காரில் தேடிச் சென்றவர்களைக் கண்டவுடன் சர்வேசுவரன் பாய்ந்து தப்பி ஒடி விட்டாணாம். அருள் மாத்திரம் ஒடும் போது அகப்பட்டிருக்கிறான். அவனைப் பிடிக்கும் போது அவனுக்கு அபயம் கொடுத்த பண்ணையார் தடுத்து மோதினாராம். துப்பாக்கியால் வேறு இவர்களை நோக்கிச் சுட்டாராம். இவர்களும் பொறுக்க முடியாமல் பண்ணையாரை மிரட்டுவதற்காக திருப்பிச் சுட்டுவிட்டு அருளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பண்ணையாருக்கு உயிருக்கு ஆபத்து இல்லையாம். காயம் மட்டுந்தானாம்.




# 15

அருள் கலங்கி, கதறி கையெடுத்துக் கும்பிட்ட வண்ணம் பரிதாபமாக நடுநடுங்கிக் கொண்டிருந்தான். அவன் ஆணவமும் அகங்காரமும் வழிந்தோடும் கண்ணீரில் கரைய விம்மிப் பொருமிக் கொண்டிருந்தான்.

'துரோகி'

**அம்மா! அய்யோ! என்னை விட்டிடுங்கோ இனி இந்தப் பிழை செய்யமாட்டேன் எனக்கு உயிர்ப் பிச்சை தாங்கோ**

'சமூக விரோதி!'

'இவனை அடித்து நொருக்க வேண்டும்'

ஆவேசம் கொண்டு ஒரு கூட்டம் கூக்குரல் எழுப்பியது.

'தாபன விசுவாசமில்லாத துரோகி'

முகாம் பொறுப்பாளர் எல்லோருக்கும் முன்னால் வந்து நின்று அவர்களை கையமர்த்தி ஒவ்வொருவராக இவனுக்கு அடிபோடுங்கள் என்றார்.

இவனைச் சுற்றி வேடிக்கை பார்க்க எல்லோரும் குழுமி நின்றார்கள். முன்னே போட்டியிட்டுப் பாய்ந்து கொண்டு தமக்குத் தெரிந்தபடி கராட்டி, ஜூடோ, பொக்சிங், ரெஸ்லிங் ஒவ்வொன்றையும் மனம்போன போக்கில் விளாசி சரிபார்த்தக் கொண்டார்கள். முகத்தில் ரத்தம் குபுகுபு என்று பாய அவன் தலை குப்புறக் கீழே விழுந்தான். சுற்றி நின்று வேடிக்கை பார்த்தவர்களில் ஒரு பகுதியினர் இப்போது பரிதாபமாக அவனைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். உற்சாகம் குறையாமல் ஒருபகுதியினர் அவனை உருட்டி விரட்டி உதைப்பதிலேயே தம்மை மறந்த வெறியில் ஈடுபட்டார்கள்.

அம்மா! அய்யோ!! என்னை விட்டிடுங்கோ

இனி இந்தப் பிழை செய்யமாட்டன்

எனக்கு உயிர்ப் பிச்சை தாங்கோ

அவுன் கதறல் அவர்களுக்க கேட்டதாக இல்லை. அதே ஆரவாரத்துடன் அமர்க்களமாக அவனை வதைத்தார்கள்

அந்த வதையிலும் ஒரு புதுமையைச் செய்யத் துடித்த அவர்கள் குணராசா என்ற சோணகிரியை கொண்டுவந்து அவன் முன்னே நிறுத்தினார்கள்.

குணராசா சண்டைக்கே பயந்தவனாம். அவனுக்கு பயம் தெளியட்டும் என்று அவனை அருளுக்கு விரும்பியபடி தாக்கச் சொல்லிவிட்டார்கள். குணராசா ஏக்கம் தொனிக்கும் தன் சிறிய கண்களை கூராக்கிக் கொண்டு தன் முன்னால் அச்சத்தோடு தடுமாறும் அருளின் ரத்தக் கறை படிந்த முகத்தின் கோரத்தைக் கண்டு மிரண்டுபோய் குழம்பி நின்றான்.

இருவரையும் சுற்றி வளைத்துக் கொண்டு அவர்கள் உற்சாகப்படுத்தினார்கள்.

குணராசா விளாசடா

விடாதை இறுக்கு! பயப்பிடாதை

அவன் ஒரு சமூக விரோதி

குணராசா மனதைக் கல்லாக்கிக் கொண்டு பற்களை இறுகக் கடித்துக் கொண்டு அருளின் ரத்தக்கறை படிந்த முகத்தில் ஓங்கி இரு குத்துக்களை விட்டபோது அவர்கள் ஆரவாரித்து கரகோசம் செய்தார்கள்.

குணராசா அவசரமாக அந்த அவமானத்திலிருந்து தன்னை விடுவிக்க வெளியேறினான். கைகளில் நனைந்த அவன் ரத்தத்தை அவசரமாகத் துடைத்துவிட்டான்.

சங்கர் நடந்தவைக்களைப் பார்த்து மனதுக்குள் புளுங்கினான்.

ஒரு மனிதன் என்னதான் பிழை விட்டிருந்தாலும் அவனைத் தண்டிப்பதில் கூட மனிதாபிமான மிளிர வேண்டும். இது சுத்த காட்டுமிராண்டித் தனம்.

பூபாலன் எங்கிருந்தோ வந்து இவன் கைகளைப் பற்றிக் கொண்டு அந்தக் காட்சியைப் பார்த்துக் கலங்கினான். நடுங்கும் அவன் கரம் அதைப் பொறுக்க முடியாமல் தவிக்கும் வேதனையைப் புலப்படுத்தியது.

அருள் அறிவு மயங்கி மல்லாந்து கீழே கிடந்தான். அவசரமாகத் தண்ணீர் வரவழைத்துத் தெளித்தார்கள். அவன் கண்விழித்ததும் முன்னைய உற்சாகம் குறையாதபடி முகாம் பொறுப்பாளர் ஆர்ப்பாட்டமாகச் சிரித்துக் கொண்டு கூறினார்.

ஒடிப்போய் ஒருவர் கத்தியும் கொச்சிக்காத் தூளும் கொண்டுவாருங்கள். இவன் முதுகுத் தோலை உரித்து கொச்சிக்காத் தூள் வைத்துத் தைக்க வேண்டும்.

வேடிக்கையாகக் கூறுகின்றார் என்றுதான் முதலில் நினைத்தார்கள்.

ஆனால் அதுவே அடுத்த கட்ட செயற்பாடான போது அவர்களுக்கு மயிர் சில்லிட்டது.

அருள் அந்த முகாம் அதிர இடியோசை போல அலறிக்கொண்டிருந்தான்.

நான்கு பேர் அவனை மரக்குற்றியொன்றோடு சேர்த்து இறுக்கிப் பிடிக்க ஒருவன் சவரக் கத்தியால் அவன் முதுகைப் பிளந்தான். வழிந்தோடும் குருதி பற்றிய கருத்தேயில்லாமல் மிளகாய்த் தூளையும் மஞ்சள் தூளையும் உப்புடன் கலந்து தடவிய பின் ஊசி நூலால் முதுகைத் தைத்தார் கள். சதையும் குருதியும் ஒருபுறம் தொங்கி படுபயங்கரமாகக் காட்சி கொடுக்க அருள் வேதனையின் விளிம்பில் நின்று துடிதுடித்து அலறிக்கொண்டிருந்தான். ஒரு பயங்கர மிருகத்தின் அபசுர ஓலமாக அது அவர்கள் எல்லோரையும் நடுங்க வைத்தது. அந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல் பலர் கண்களை மூடினார்கள் ஒருவன் மூர்ச்சிழித்து விழுந்தான்.

யாராலும் அதைத் தடுக்க முடியவில்லை.

இரண்டு மணி நேரத்தின் பின்பு பேச்சு மூச்சற்றுக் கிடந்த அருளை ஆஸ்பத் திரிக்குக் கொண்டு போவதாகக் கொண்டு சென்றார்கள்.

அதன் பின் அந்த மைதானம் ஆரவாரம் அடங்கி அமைதியாயிற்று.

இரண்டு நாட்களின் பின் மதிய சாப்பாட்டின் போதுள்ள ஒரு மணி நேர இடைவெளியில் பூபாலன் சங்கரைத் தேடி வந்து சந்தித்தான்.

அருளுக்கு நடந்த தண்டனை நியாயமெங்கிறியா? அவன் வட்டக் கண்களைப் பெரிதாக உருட்டிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டவன் தடித்த உதடுக ளை பற்களால் இறுகக் கடித்துக் கொண்டு நின்றான். மிகக் கனமான சேதிகள் பலவற்றை தாங்க முடியாமல் தடுமாறும் அவன் சிவந்த முகத்தின் கண்கள் இரண்டும் சுவர்க்கடிகார பெண்டுலம் போல இருபக்கமும் மாறிமாறித் தாவியது.

சங்கர் பேசமுடியாமல் மௌனமாகவே இருந்தான்.

அவனுக்கு அருளின் அந்த அவல ஒலி மீண்டும் ஒருதடவை அந்த முகாமைச் சுற்றிக் கேட்பது போலிருந்தது.

அக்கம் பக்கம் கழுத்தை வளைத்துப் பார்த்து விட்டு பூபாலனே மீண்டும் கேட்டான்.

அது கிடக்கட்டும் அருள் இப்போது எங்கே என்று தெரியுமா?

வைத்தியசாலையிலாக்கும்.

இல்லை. அவன் செத்துப் போனான். நான் சொன்னேன் சித்திரவதை முகாம் அங்கு கொல்லப்பட்டுவிட்டான்.

சங்கர் எதுவும் பேசத் தோன்றாமல் தன்னை மறந்த அதிர்ச்சியில் நின்றான். தன்உணர்வுகளை மறைக்க கைகளிரண்டாலும் தலைமயிரைக் கோதிவிட்டுக் கொண்டான்.

அவன் கொல்லப்பட வேண்டியவன் என்றே வைத்துக் கொள்வோம். அதுக்கு இப்படி சித்திரவதை செய்து கொல்வதா? இவங்கள் எல்லாம் விடுதலைப்போராளிகள் என்று நான் ஒத்துக் கொள்ள மாட்டன். இவர்கள் அராஜகவாதிகள் தான்.

திரும்பவும் அவனே பேசிவிட்டு பதில் பேச முடியாமல் இருக்கும் சங்கரின் காதுக்கு மட்டும் கேட்கும்படி கூறினான்.

அருளைக் கொண்டுவரும் போது பாதுகாப்புக் கொடுத்த பண்ணையாரைச் சுட்டு விட்டதாகக் கூறினார்களே. அந்த ஆள் செத்து விட்டானாம். அவன் அப்படி ஒன்றும் இவர்களைச் சுடவில்லை. அபயம் கொடுத்தவன் என்ற வகையில் பொலிசில் போய் முறையிடுங்கள் என்று இவர்களிடன் விவாதித்திருக்கிறான். இவங்கள் தான் சர்வேசுவரன் தப்பிப் போன ஆத்திரத்தில் அவனைச் சுட்டுக் கொன்று விட்டார்கள். இதை மூடி மறைக்கத் தான் அவன் சுட்டதாக கதை விட்டார்கள்.என்றவன் மூச்சை இழுத்து இன்னும் அந்தக் கண்களை நன்றாக உருட்டி விட்டு இன்றைய பேப்பர் பார்த்தாயா விவசாயி கொலை என்ற பெயரில் செய்தி பேப்பரில் வந்திருக்கிறது. இதெல்லாம் எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா? எல் லாம் சுத்த மோசம். இப்பொழுது அந்தக் கொலையுண்ட பண்ணையார் ஒரு கள்ளக் கடத்தல் காரன் என்று கதை அளக்கின்றார்கள். எனக்கென்னவோ கழகத்தில் நடப்பது எல்லாம் பெரும் மர்மமாகத் தான் இருக்கிறது.

திகிலுற்றவன் போல பூபாலன் கூறினான். சங்கர் என்றுமில்லாதபடி அவன் கைகளைப் பற்றிக் கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்தான்.

இராணுவத்தில் தண்டனைகள் வழங்கப்படுவதை சங்கரால் ஏற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால் அது மரண தண்டனையாக இருப்பதை ஏனோ அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அப்படித்தான் மரணதண்டைனை வழங்குவதாயினும் அது பண்டைக்கால அநாகரிக சித்திரவதையாக இல்லாமல் இருக்க வேண்டும் என்பதில் கண்டிப்பான கொள்கையுடையவனாக இருந்தான். அவனுக்கு வழங்கப்பட்ட அந்தக் காட்டுமிராண்டித் தனமான சித்திரவதை அவன் இதயத்தை மோசமாகத் துன்புறுத்தியிருந்தது. தண்டனைகள் திருத்தும் நோக்கில்லாமல் பழிவாங்கும் குரோத உணர்வில் நடத்தப்படுவது அவன் மென்உணர்வுகளை மோசமாகப் பாதித்தது.

மகன் முதலாளித்துவ இராணுவம் எப்பொழுதுமே முதலாளித்துவ நலன்களுக்கு சேவை செய்வதற்காகவே உருவாக்கப்பட்டது. அந்த இராணுவம் அதற்கேற்ப அராஜகப் போக்கில் மிருக உணர்வுகளோடு கட்டமைத்திருப்பார்கள். ஆனால் ஒரு மக்கள் இராணுவம் அப்படிப்பட்டதல்ல. அது மானுட விமோசனத்திற்காக வேண்டி புதிய உலகம் படைக்கத் துடிக்கும் போராளிகளின் உணர்வில் பிறந்தது. அது உயர்ந்த மனிதாபிமானத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருக்கும். நீ அப்படிப்பட்ட ஒரு மக்கள் இராணுவத்தின் போர் வீரனாக இருப்பதற்கு பெருமைப்பட வேண்டும்.

அப்பா எவ்வளவு நம்பிக்கையோடு இவனை

தொடர்ச்சி 2ம் பக்கம்

**இந்த இதழில் இடம்பெற இருந்த வடக்கும் தெற்கும் தொடர் நவீனம், இந்தியாவை பயமுறுத்தும் மனித கொல்லி நோய் ஆகியவை அடுத்த இதழில் இடம்பெறும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




The Eelabhoomi Publication's
**Triangle Cricket Tournment**

On
23-08-1992 Sunday
From 9.00am to 5.00pm
At
Thomas Wall Ground
Green Lane
Rosehill, Sutton



Teams
Tooting Blues
Serendip
&
Greenford C.C

Admision £1.00
Under 12 Free

ஈழபூமி வெளியீட்டகம் நடாத்தும்
மும்முனைக் கிரிக்கட் போட்டி
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

**Drinks & Food Stores Available**


## 500 தமிழ் இளைஞர்கள் கழுத்துறை வதைமுகாமில்

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலிருந்து கைது செய்யப்பட்டவர்கள் என்ற பேரில் பல இளைஞர்கள் தற்போது கழுத்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பினும் இவர்கள் மேல் எவ்வித குற்றப்பத்திரிகைகளும் தாக்குதல் செய்யப்படவில்லை. விசாரணை என்ற பேரில் பலர் கடுமையான சித்திர வதைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இம்முகாமில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்புப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மேட்டன் கல்லூரியில் சாதனை படைத்த தமிழ் மாணவர்கள்

(மேட்டன்)

கடந்த ஜூன் மாதம் நடந்த உயர்தர வகுப்புப் பரீட்சை முடிவுகள் இரு தினங்களுக்கு முன் வெளியாகியுள்ளது. இம்முறை தெற்கு லண்டனிலேயே சிறந்தபெறுபேறுகளைப் பெற்றிருக்கும் மேட்டன் கல்லூரி தமிழ் மாணவர்களைப் பாராட்டியுள்ளது.

இங்கு மூன்று பாடங்கள் மட்டுமே உயர்தரத்தில் பயிற்றப்படுகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே. அதன் படி நான்கு தமிழ் மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'A' சித்தியினை பெற்றிருக்கின்றார்கள். அதி கூடிய இந்தச் சித்தியினை கணிதத் துறையில் பயின்ற மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

வெள்ளை இனத்தவரோ அன்றி வேறு நாட்டவர்களோ எவரும் இவ்வாறு மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தியினைப் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தியினைப் பெற்றவர்கள் மதன் மோகன், பிரசாத், ஜூலியன், ரவி என்பவர்களே அந்த நான்கு பேர்களுமாகும். அவர்களுக்கு ஈழபூமியின் பாராட்டுக்கள்.

## அரச கட்டுப்பாட்டிலிருக்கும் வைத்தியசாலைகளில் கடமையாற்ற யாழ் வைத்தியர்கள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் கடமையாற்ற வைத்தியர்களை அனுப்புமாறு பணித்த அரசின் கட்டளையை யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் நிராகரித்துள்ளார். தற்போது யாழ்க் குடாவில் தீவுப் பகுதி அரசின் பிடியிலிருப்பது யாவரும் அறிந்ததே. தென்பகுதியிலிருந்து வைத்தியர்கள் பயத்தின் காரணமாக வடபகுதியிலிருக்கும் இராணுவ வைத்தியசாலையில் கடமையாற்ற தயக்கம் தெரிவித்து வருவதைத் தொடர்ந்தே அரசு யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களை தீவுப் பகுதிக்குச் சென்று பணியாற்ற பணித்தது. ஏற்கனவே யாழ்போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் தட்டுப்பாட்டில் இருப்பது தெரிந்தும் அரசு வைத்தியர்களை வேறு இடத்துக்குச் செல்ல பணிப்பது யாழ்க்குடா மக்களை பலிகொடுக்கும் நடவடிக்கையே என பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். மேற்படி காரணங்களையும், வைத்தியர்களின் பாதுகாப்பையும் சுட்டிக்காட்டிய பணிப்பாளர் அரசின் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

## ஆக்கிரமிப்பு அரசு தொடர்ந்தும் தோல்வியையே தழுவும் - L.T.T.E

யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புப்படையின் தாக்குதல்களை முறியடிக்க மக்கள் அனைவரையும் ஒன்றுகூடி தம்முடன் போரட வருமாறு விடுதலைப் புலிகள் அறிக்கை விடுத்துள்ளனர். யாழ்நகரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள யுத்தத்தினால் பல கடைகள் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், பல பொது மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்துமிருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர். அரசின் தாக்குதலைச் சமாளிக்க விடுதலைப் புலிகளும் பாரிய அழவில் தயாராக அணி திரண்டிருப்பதாகவும், தொடர்ந்து தோல்வியைத் தழுவும் இலங்கை ஆக்கிரமிப்பு அரசு மீண்டும் ஓர் தோல்வியைச் சந்திக்கப்போவதாக இவர்களின் அறிக்கை மேலும் கூறுகிறது. யாழ்நகரில் இருந்து அண்மையில் கொழும்பு திரும்பியவர்களின் தகவலின் படி விடுதலைப் புலிகளை அங்கு வெல்வது என்பது இலகுவான காரியமல்ல என்றும் அரசின் தாக்குதல் அதிகரிக்க, அதிகரிக்க விடுதலைப் புலிகள் பக்கம் ஆதரவு பெறுகுவதாகவும் இவர்கள் கூறுகிறார்கள்.

## மட்டுநகரில் தொடரும் கண்ணிவெடித் தாக்குதல்கள்

(மட்டுநகர்)

கடந்த 17ம்திகதி மட்டுநகரில் இடம்பெற்ற கண்ணிவைடிச் சம்பவம் ஒன்றில் இரண்டு இராணுவத்தினர் இறந்துள்ளனர். இச்சம்பவத்தில் மேலும் பல இராணுவத்துனர் காயமடைந்துள்ளனர். இக்கததண்ணிவைடிக்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர். இதனையடுத்துஅடுத்து சம்பவம் நடந்த இடத்தை சுற்றி வளைத்த இராணுவத்தினர் பலரைக் கைது செய்துள்ளனர்.இவர்களில் பலர் விடுவிக்கப்பட்டிருப்பினும் இன்னும் கைது செய்யப்பட்டவர்களில் ஆறு பேருக்கு என்ன நடந்தது என அறியமுடியவில்லை.


மேட்டன் கல்லூரி முத்தமிழ் விழா
விடியோ கசட்டுக்கள் விற்பனைக்கு
தொடர்புகட்கு தயாபரன் , ஜெயா
Tel: [illegible]

Weddings - Birthdays & ALL Your Special Events
☹Video Filming☹
☺Contact Expo On 081 672 6629☺

EXPO ☞ Quality With Experts
*Video Filming * Computer Image Processing * Computer Graphics*
*Video Special Effects * Video Editing * Audio Dubbing*